## கோவை மலர்க் கண்காட்சி: கூட்ட நெரிசலில் சிக்கிய மக்கள்

First Published : 11 Jan 2010 07:27:11 AM IST
Last Updated :

கோவை, ஜன.10: கோவை மலர்க் காட்சியைக் காண ஆயிரக்கணக்கான மக்கள், ஒரே சமயத்தில் குவிந்ததால், கடும் கூட்டநெரிசல் ஏற்பட்டது.

÷வேளாண் பல்கலை.யின் தாவரவியல் பூங்காவில் கோவை மலர்க் கண்காட்சி சனிக்கிழமை துவங்கியது. இந்தக் கண்காட்சி ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைவதால், அன்று மாலை ஆயிரக்கணக்கான மக்கள் ஒரே நேரத்தில் மருதமலை சாலையில் குவிந்தனர்.

இதனால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பல கி.மீ. தொலைவிற்கு வாகனங்கள் நகர முடியாமல் ஸ்தம்பித்து நின்றன. அங்காங்கே வாகனங்களை நிறுத்திவிட்டு, கண்காட்சியை காண மக்கள் நடந்தே சென்றனர்.

÷இதனால், தாவரவியல் பூங்கா அருகே கடும் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும், போக்குவரத்தை சீராக்கவும் போதுமான போலீஸô்ர் பணியில் ஈடுபடுத்தப்படவில்லை. பணியில் இருந்து சில போலீஸô்ரும் கூட்டத்தை சமாளிக்க முடியாமல் திணறினர்.

÷மலர்க் கண்காட்சியையொட்டி மருதமலை சாலையில் கூடுதல் பஸ்கள் இயக்கப்படவில்லை.

அச் சாலையில் வழக்கமான இயக்கப்பட்ட பஸ்களில் கூட்டம் நிரம்பி வழிந்தது. இதனால், மலர்க் கண்காட்சியை காண வந்த மக்கள் அவதிக்குள்ளாகினர்.

## காடு வளர்ப்புத் திட்டத்தில் மகளிருக்கு ரூ.11.30 லட்சம் நிதியுதவி

First Published : 11 Jan 2010 03:51:52 AM IST
Last Updated :

அரூர், ஜன. 10: தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு ரூ.11.30 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

அரூர் வனக் கோட்ட அலுவலக வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விழாவுக்கு, மாவட்ட வன அலுவலர் து.அருண் தலைமை வகித்தார்.

வனப் பகுதியில் வசிக்கும் மகளிர் கால்நடைகளை பராமரிப்பு செய்து, பொருளாதார நிலையை உயர்த்தும் வகையில், மகளிர் குழுவினருக்கு நிதியுதவியை எம்எல்ஏ பி.டில்லிபாபு வழங்கினார் (படம்).

தீர்த்தமலை வனச்சரகம் காட்பாடி கிராமத்தைச் சேர்ந்த 46 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு தலா ரூ.10 ஆயிரமும், இரண்டு மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு தலா ரூ.20 ஆயிரமும், மொரப்பூர் வனச்சரகம் பன்னிமடுவு,

ஆண்டிப்பட்டி புதூர், குரும்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த வனக்குழு உறுப்பினர்கள் 41 பேருக்கு தலா ரூ.10 ஆயிரம் வீதம் என ரூ.11,30,000-க்கான நிதியுதவி வழங்கப்பட்டது.

கோட்டாட்சியர் எஸ்.மோயீசன், டிஎஸ்பி எல்.சீனிவாசன், வட்டாட்சியர்கள் எம்.பொன்னுசாமி, கி.மோகன், துணை வட்டாட்சியர் கமலநாதன், வனச் சரகர்கள் டி.மனோகரன், எஸ்.ராமசாமி, வேணுகோபால் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### மேட்டூர் அணை நீர்மட்டம் 92.63 அடி

First Published : 11 Jan 2010 07:16:34 AM IST
Last Updated :

சேலம், டிச.11: மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 92.63 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 4,206 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 10,583 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

அணையின் நீர் இருப்பு 55.70 டி.எம்.சி.

### பயிர்க் காப்பீடு இழப்பீடு: மத்திய அரசிடம் மீதித் தொகையை பெற முதல்வர் நடவடிக்கை

First Published : 11 Jan 2010 06:25:14 AM IST
Last Updated :

தஞ்சாவூர், ஜன. 10: பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகையில், மத்திய அரசிடம் இருந்து வர வேண்டிய மீதித் தொகையைப் பெறுவதற்கு முதல்வர் கருணாநிதி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். மத்திய அரசு வழங்க வேண்டிய தொகையில், ஒரு பாதித் தொகையான ரூ. 113.11 கோடி தற்போது வழங்கப்பட்டுள்ளது என்றார் மத்திய நிதித் துறை இணையமைச்சர் எஸ்.எஸ். பழநிமாணிக்கம்.

தஞ்சாவூரில் சனிக்கிழமை நடைபெற்ற விழாவில், பயிர்க் காப்பீடு இழப்பீட்டில் மத்திய அரசின் பங்குத் தொகையை விவசாயிகளுக்கு வழங்கி மேலும் அவர் பேசியது:

2008-09 ஆம் ஆண்டில் காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கி மூலம் 81,300 விவசாயிகளுக்கு ரூ. 216.8 கோடிக்கு பயிர்க் காப்பீடு செய்யப்பட்டது.

இதேபோல, கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி மூலம் 2,29,705 விவசாயிகளுக்கு ரூ. 595.3 கோடி பயிர்க் காப்பீடு செய்யப்பட்டது.

காப்பீடு செய்யப்பட்ட மொத்தத் தொகையில் மாநில அரசின் பங்கான 50 சதத் தொகையில், தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கிக்கு ரூ. 64.64 கோடியும், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிக்கு ரூ. 161.57 கோடியும் கடந்த செப்டம்பர் மாதம் வழங்கப்பட்டது.

மத்திய அரசு தனது பங்குத் தொகையில் அளித்த ஒரு பாதித் தொகையான 113.11 கோடியில், தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கிக்கு ரூ. 32.32 கோடியும், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிக்கு ரூ. 80.79 கோடியும் தற்போது வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு வழங்க வேண்டிய மீதித் தொகையைப் பெறுவதற்கு தமிழக முதல்வர் கருணாநிதி தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறார் என்றார் பழநிமாணிக்கம்.

விழாவில் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். சண்முகம், மாவட்ட வருவாய் அலுவலர் மு. கருணாகரன், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் சிவாஜி, காப்பீட்டுக் கழக ஒருங்கிணைப்பாளர் வ. பழனியப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 20 சத ஈரப்பதமுள்ள நெல்லை கொள்முதல் செய்யக் கோரிக்கை

First Published : 11 Jan 2010 06:24:48 AM IST
Last Updated :

தஞ்சாவூர், ஜன. 10: தமிழக அரசு குவிண்டால் நெல்லுக்கு அறிவித்த ரூ. 50 ஊக்கத் தொகையை உடனடியாக வழங்குவதுடன், 20 சதம் ஈரப்பதமுள்ள நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஏஐடியுசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தொழிலாளர் சங்க மாநிலப் பொதுச் செயலர் சி. சந்திரகுமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சம்பா பருவத் தொடக்கத்தில் பயிரிடப்பட்ட நெல் அறுவடை தொடங்கி, விற்பனைக்கும் வந்து விட்டது. விவசாயிகள் அறுவடை செய்தவுடன் விற்பனை செய்ய வேண்டிய கட்டாயத்திலும், அதையே வழக்கமாகக் கொண்டுள்ளதாலும் அரசு நிர்ணயித்துள்ள ஈரப்பதத்துக்குள் வராததால், அரசு நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்க இயலாமல் தனியார் வியாபாரிகளிடம் அவர்கள் கேட்கும் விலைக்கு விற்று வருகின்றனர்.

பொதுவாக, பனிப் பொழிவு காலங்களில் நெல்லின் தரம் நன்றாக இருந்தாலும், ஈரப்பதம் கூடுதலாக இருக்கும். எனவே, பனிப் பொழிவு அதிகமுள்ள பிப்ரவரி மாதம் வரை 20 சதம் வரை ஈரப்பதத்தை அனுமதித்தால்தான், அரசு கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் நெல்லை விற்பனை செய்ய இயலும். இல்லாவிடில், தனியார் வியாபாரிகளைத் தேடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும்.

அரசு, குவிண்டால் நெல்லுக்கு அறிவித்த ரூ. 50 ஊக்கத் தொகை இன்னும் நடைமுறைக்கு வரவில்லை என்பதையும், ஈரப்பதத்தையும் வாய்ப்பாகப் பயன்படுத்தி தனியார் வியாபாரிகள் முழு வீச்சில் கொள்முதலில் இறங்கியுள்ளனர். இதனால், அரசு கொள்முதல் நிலையங்களுக்கு நெல் வரத்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு சம்பா பருவம் முழுவதும் 20 சதம் ஈரப்பதம் வரை அரசு கொள்முதல் செய்தது. தற்போது மழை பெய்து வரும் நிலையிலும் 17 சதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்வது என்பது பொருத்தமற்றது. எனவே, தமிழக அரசு 20 சதம் ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்ய அனுமதி வழங்க வேண்டும்.

## வேளாண் காப்பீட்டுத் திட்டம் 5 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.651 கோடி நஷ்டஈடு

First Published : 11 Jan 2010 03:44:05 AM IST
Last Updated :

திருவண்ணாமலை, ஜன.10: தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு 18 மாவட்டங்களைச் சேர்ந்த 5 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.651 கோடி நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளதாக அக்ரிகல்ச்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அதன் மண்டல மேலாளர் அன்பரசு வெளியிட்டுள்ள அறிக்கை:

தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அனைத்து விதமான உணவுப் பயிர்கள் (தானியங்கள், சிறு தானியங்கள்), பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் வணிக தோட்டக்கலை பயிர்கள் காப்பீடு செய்யப்படுகின்றன. அதே போல் நெல், கேழ்வரகு, சோளம், கம்பு, நிலக்கடலை, எள், உளுந்து, கொள்ளு, பருத்தி, கரும்பு, உருளைக்கிழங்கு, வாழை, மிளகாய், மஞ்சள், வெங்காயம் பயிர்களும் காப்பீடு செய்யப்படுகின்றன.

வெள்ளம், வறட்சி, பூச்சிகள் மற்றும் நோய்கள் தாக்குதல் போன்றவற்றால் ஏற்படும் மகசூல் இழப்புகளுக்கு காப்பீடு தரப்படுகிறது.குத்தகைத்தாரர்கள், வங்கிக்கடன் பெறுவோர் மற்றும் கடன் பெறாதோர் உள்பட அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம். சராசரி மகசூலில் 150 சதம் மதிப்பு வரை காப்பீடு செய்யலாம்.

விவசாயிகள் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் வங்கியிலேயே திட்டத்தில் சேர்க்கப்படுகின்றனர். இத்திட்டத்தின் மூலமாக கடந்த ஆண்டு 18 மாவட்டங்களைச் சேர்ந்த 5 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.651 கோடி நஷ்டஈடு தரப்பட்டுள்ளது.உணவு பயிர்களுக்கு சிறு, குறுவிவசாயிகள், மற்றவர்கள் செலுத்த வேண்டிய காப்பீடு கட்டணம்:

நெல்லுக்கு சிறு விவசாயிகள் ரூ.330-ம், மற்றவர்கள் ரூ.366-ம் பிரீமியமாக செலுத்த வேண்டும். கம்புக்கு ரூ.236, ரூ.262, சோளத்துக்கு ரூ.181, ரூ.201, கேழ்வரகு-ரூ.179, ரூ.199, மக்காச்சோளம்-ரூ.49, ரூ.54, நிலக்கடலை-ரூ.476, ரூ.528, எள்-ரூ.167, ரூ.185, சூரியகாந்தி-ரூ.436, ரூ.484, உளுந்து-ரூ.21, ரூ.23, பச்சையபயிறு-ரூ.124, ரூ.138, கொள்ளு-ரூ.105, ரூ.116.

பணப் பயிர்கள்: நெல் தரிசில் பருத்தி-ரூ.1684, ரூ.1871, பருத்தி-ரூ.649, ரூ.721, மிளகாய்-ரூ.574, ரூ.638, வாழை-ரூ.7411, ரூ.8234, மரவள்ளி-ரூ.2200, ரூ.2444, வெங்காயம்-ரூ.938, ரூ.1042, கரும்பு-ரூ.788, ரூ.876, உருளை-ரூ.410, ரூ.456.

ஒவ்வொரு வட்டாரத்திலும் மாநில அரசின் விவசாயத் துறையினரால் பயிர் அறுவடை காலத்தில் 16, 10 பயிர் அறுவடை சோதனைகள் நடத்தப்படுகிறது. நடப்புப் பருவத்தின் சராசரி மகசூலை, கடந்த மூன்று அல்லது ஐந்து ஆண்டுக்கால உத்தரவாத மகசூலோடு ஒப்பிடும் போது நடப்பு பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைந்துள்ளதோ அந்த விகிதப்படி அந்த வட்டாரத்தில் காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் காப்பீட்டுத் தொகைக்கு ஏற்ப நஷ்டஈடு தரப்படுகிறது.

பயிர் கடன் பெறாத விவசாயிகள்: பயிர் கடன் பெறாத விவசாயிகள் முன்மொழிவுப் படிவத்துடன் கணினி, சிட்டா அல்லது அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலரிடம் இருந்து சான்றிதழ் பெற்று தாங்கள் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் வங்கியில் பிரீமியத்தை மேலே கூறியுள்ள தேதிக்கு முன் செலுத்த வேண்டும். முன்மொழிவு படிவங்களை விவசாயத்துறையிடமும், கூட்டுறவு வர்த்தக வங்கியிலும் பெறலாம்.

மேலும் விவரங்களுக்கு: மண்டல மேலாளர், அக்ரிகல்ச்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிட், எண். 323, முதல் தளம், ஆந்திரா இன்சூரன்ஸ் பில்டிங், தம்புச்செட்டித் தெரு, பாரிமுனை, சென்னை-1. தொலைபேசி-044-42051349, 42501350, செல்-9940326750.

**பொருளாதார வளர்ச்சி விகிதத்தில் வேளாண்மையின் பங்கு அதிகரிக்க வேண்டும் : சிவா எம்.பி.**

First Published : 11 Jan 2010 06:06:54 AM IST
Last Updated :

திருச்சி, ஜன.10:  நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சியில் வேளாண் துறையின் பங்கு அதிகரிக்க வேண்டும் என்றார் மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி என். சிவா.

திருச்சி தேசிய கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு பொருளியலாளர்கள் சங்கத்தின் 30 ஆம் ஆண்டு மாநாட்டின் நிறைவு விழாவில் அவர் மேலும் பேசியது:

உலகப் பொருளாதாரம் சிதைந்தபோது கூட, நம் நாடு பாதிக்கப்படவில்லை. உலகமயமாக்கலுக்குப் பிறகு சந்தைப் பொதுவானதாக மாறிவிட்டது. ஆனால், கிராமப் பொருளாதாரம் முன்னேற்றமடையவில்லை.

நம் நாடு 60 சதம் விவசாயத்தைச் சார்ந்துள்ளது. ஆனால், ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சி விகிதத்தில் வேளாண்மையின் பங்கு மிகவும் குறைவாக இருக்கிறது.

எவ்வளவோ தொழில்நுட்பங்கள் வளர்ந்தாலும், இந்தியா விவசாய நாடு என்ற நிலை மாறாது. விவசாயத்தைக் கைவிட்டால் நம் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

நம் நாட்டின் பொருளாதாரம் மேலும் வலுப் பெற வேண்டுமானால், ஆட்சியாளர்கள் மட்டுமல்ல; அதிகாரிகள், பொருளியல் வல்லுநர்கள், மாணவர்கள் ஆகியோரின் பங்களிப்பும் இருக்க வேண்டும். இந்தப் பங்களிப்பு இருந்தால்தான் நம் நாடு எதிர்காலத்தில் வளமான நாடாக மாறும்.

எனவே, பொருளியல் வல்லுநர்கள், மாணவர்கள் ஆகியோர் திட்டங்களைத் தீட்டுதல், முடிவு எடுத்தல், அடிப்படையை ஆழமாக ஆய்வு செய்தல் போன்றவற்றில் ஈடுபட வேண்டும். நம் நாடு விவசாயத்தை மையப் பொருளாகக் கொண்டு செயல்படும் வகையில் பொருளியல் வல்லுநர்களும், மாணவர்களும் பாடுபட வேண்டும்' என்றார் சிவா.

முன்னாள் மேயர் சாருபாலா ஆர். தொண்டைமான், சங்கப் பெருந்தலைவர் அருள்தந்தை ஏ.ஜி. லியோனார்டு, சங்கத் தலைவர் ஆர். ராஜேந்திரன், செயலர் எஸ்.எம். சூரியகுமார், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, சங்கப் பொருளாளர் டி. குமார் வரவேற்றார். மாநாட்டுச் செயலர் கே. இளங்கோ நன்றி கூறினார்.

**ரூ.14 லட்சத்தில் வேளாண் உபகரணங்கள்**

First Published : 11 Jan 2010 01:51:49 AM IST
Last Updated :

விழுப்புரம்,  ஜன. 10: விழுப்புரத்தில் ரூ.14.35 லட்சத்தில், 13 விவசாயிகளுக்கு வேளாண் உபகரணங்களை மாவட்ட ஆட்சியர் ஆர்.பழனிச்சாமி அண்மையில் வழங்கினார்.

வேளாண்மை பொறியியல் துறை சார்பில் விவசாயிகளுக்கு தேவையான மினி டிராக்டர்கள், பவர் டில்லர்கள், நெல் நடவு செய்யும் இயந்திரம், நெல் அறுவடை இயந்திரம், நீர்மூழ்கி மின்மோட்டார், களையெடுக்கும் கருவி, மரக்கிளைகளை வெட்டும் கருவி, டிராக்டர் உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு கருவிகள் வழங்கப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இந்த உபகரணங்களை வழங்கி ஆட்சியர் பேசியது:

உபகரணங்களை முழுமையாக பயன்படுத்துமாறும், எக்காரணத்தைக் கொண்டும் அதனை விற்பனை செய்யக்கூடாது என்றும், அப்படி விற்பனை செய்யப்பட்டது கண்டறியப்பட்டால் மானியத் தொகையை வசூலிப்பதோடு, குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவுறுத்தினார்.

இந் நிகழ்ச்சியில் வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் காதர்மைதீன், மாவட்ட வருவாய் அலுவலர் சி.கதிரவன், துணை ஆட்சியர் (பயிற்சி) சுப்புலட்சுமி, உதவி செயற்பொறியாளர்கள் ராதாகிருஷ்ணன், வேலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 10 ஆயிரம் ஹெக்டேரில் எண்ணெய்ப் பனை பயிரிட இலக்கு

First Published : 10 Jan 2010 12:49:59 AM IST
Last Updated :

விழுப்புரம், ஜன.9:  விழுப்புரம் மாவட்டத்தில் இந்த ஆண்டில் 10 ஆயிரம் ஹெக்டேரில் எண்ணெய்ப் பனை பயிரிடும் இலக்கை எட்டும் வகையில் அலுவலர்களின் செயல்பாடுகள் அமைய வேண்டும் என்று வேளாண்மை இணை இயக்குநர் கே. ராமலிங்கம் தெரிவித்தார்.

திருச்சி காவேரி பாமாயில் நிறுவனம் சார்பில் கடலூர், விழுப்புரம் மாவட்ட வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கான எண்ணெய்ப்

பனை சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி முகாம் விழுப்புரத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி இணை இயக்குநர் பேசியது: விழுப்புரம் மாவட்டத்தில் 2007-ம் ஆண்டில் எண்ணெய்ப் பனை விவசாயம் தொடங்கப்பட்டது.

முதலில் பில்லூரில் ராஜரத்தினம் என்பவர் நிலத்தில் தான் நடவு செய்யப்பட்டது.

இதுவரை 2 ஆயிரம் ஹெக்டேரில் தான் பயிரிட முடிந்தது. எண்ணெய்ப் பனை பயிர் புதியது என்பதால் அலுவலர்களுக்கும், விவசாயிகளுக்கும் பயிற்சி அவசியம்.

நாட்டில் எண்ணெய் உற்பத்தி குறைவாக உள்ளது. அதனை அதிகரிக்க பாமாயில் பயிர் அவசியமாகிறது.

மணிலா, எள், ஆமணக்கு, சூரியகாந்தி போன்ற எண்ணெய் வித்துப் பயிர்களை நாம் பெரும்பாலும் மானாவாரியாகத் தான் பயிரிடுகிறோம். எனவே அவை போதுமானதாக இல்லை.

விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் புதிதாக பணியில் சேர்ந்துள்ள அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தால்தான், இந்த பயிரில் உள்ள லாபம், விளைச்சல் குறித்து விவசாயிகளுக்கு விளக்க முடியும். எனவே தான் இந்த பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

இந்த மாவட்டத்தில் தொழில் வாய்ப்புகள் இல்லை, விவசாயத்தை நம்பித்தான் மக்கள் உள்ளனர். எனவே அதிக வருவாய் பெற எண்ணெய்ப் பனை பயிரிடலாம். மணிலாவில் ஹெக்டேருக்கு 400 கிலோ எண்ணெய்தான் கிடைக்கிறது. ஆனால் எண்ணெய்ப் பனையில் 4,000 கிலோ கிடைக்கிறது. எண்ணெய்த் தேவையை நிறைவு செய்ய வேண்டுமானால் நாம் இம் மாவட்டத்தில் 10 ஆயிரம் ஹெக்டேரில் பயிரிட வேண்டும்.

இது தனியார் நிறுவனத்தின் பணி என்று இருக்காமல், வேளாண் விரிவாக்க அலுவலர்கள் 2009-10-ம் ஆண்டுக்கான பயிரிடும் இலக்கை எட்ட வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் கடலூர் வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) கே. பாபு, துணை இயக்குநர் எம்.ராதாகிருஷ்ணன், விழுப்புரம் துணை இயக்குநர் கே. கண்ணன் ஆகியோர் விளக்கவுரையாற்றினர்.

### நீடாமங்கலத்தில் குளிர் பிரதேச சாகுபடி பயிற்சி

First Published : 11 Jan 2010 06:28:33 AM IST
Last Updated :

நீடாமங்கலம் ஜன. 10: நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் மேலநாகையில் குளிர் பிரதேச சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய ஒரு நாள் களப்பயிற்சி நடத்தப்பட்டது.
நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் தி.செங்குட்டுவன் தலைமை வகித்தார். தோட்டக் கலைத்துறை பண்ணை மேலாளர் ரா.கார்த்திக் பயிற்சியை நடத்தினார்.

பரிசோதனைத் திடலுக்கான இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

30 விவசாயிகள் பயிற்சி பெற்றனர். மன்னார்குடி வேளாண் உதவி இயக்குனர் மயில்வாகணன் கலந்து கொண்டார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை நிலைய திட்ட உதவியாளர் தே.ரேகா,உதவிப் பேராசிரியர் கை.குமணன் மற்றும் முன்னோடி விவசாயிகள் செய்திருந்தனர்.

### விவசாய கூட்டுப் பொறுப்பு குழுக்களுக்கு ரூ.5 லட்சம் வரை கடன்

First Published : 11 Jan 2010 01:18:50 AM IST
Last Updated :

காஞ்சிபுரம், ஜன. 10: விவசாய கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு மத்திய கால கடனாக ரூ.5 லட்சம் வரை வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளதாக காஞ்சிபுரம் சரக துணைப் பதிவாளர் பி.ராஜமாணிக்கம் தெரிவித்தார்.

÷காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் தாமல் கிராம தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினர்கள் கல்வித் திட்ட பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது. இப் பயிற்சி முகாமில் காஞ்சிபுரம் சரக துணைப் பதிவாளர் ராஜமாணிக்கம் தலைமை தாங்கி பேசியது:

÷கடந்த 1-4-2009 முதல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கும் விவசாயிகள் குறித்த காலத்தில் கடன் தொகையை செலுத்தினால் அவர்கள் வட்டி செலுத்த தேவையில்லை. விவசாய கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் சார்பாக வழங்கப்படும் விவசாய கடன்களுக்கும் வட்டி செலுத்த வேண்டியதில்லை.

÷இக் குழுக்களுக்கு மத்திய கால கடனாக ரூ.5 லட்சம் வரை வழங்க வழிகள் உள்ளன. விவசாயிகள் பயனடையும் வகையில் மேற்படி சங்கத்தில் வேளாண் மருந்தகம் ரூ.6 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு மண் பரிசோதனை, நீர் பரிசோதனை செய்யப்பட்டு விவசாய மேம்பாட்டுக்கான ஆலோசனைகள் வழங்கப்படுகிறது என்றார்.

÷இம் முகாமில் காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தனி அலுவலர் கு.சேகர், காஞ்சிபுரம் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் டி.வி.சுப்பிரமணியன், கூட்டுறவு கள அலுவலர் டி.எஸ்.அன்பழகன், கூட்டுறவு சார்பதிவாளர் கே.கோதண்டராமன், சங்கச் செயலர் பக்தவச்சலம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

÷இந் நிகழ்ச்சியில் 70-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

## கருகும் பயிர்களை காப்பாற்ற வைகையில் தண்ணீர் திறக்கக் கோரி மானாமதுரையில் 20-ல் சாலை மறியல்

First Published : 10 Jan 2010 10:58:51 AM IST
Last Updated :

மானாமதுரை-ஜன.9: மானாமதுரை தாலுகாவில் தண்ணீரின்றி கருகும் பயிர்களைக் காப்பாற்ற வைகையில் தண்ணீர் திறக்க வலியுறுத்தி இம் மாதம் 20-ம் தேதி மானாமதுரையில் சாலை மறியல் போராட்டம் நடத்த அனைத்துக் கட்சியினர் மற்றும் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நடந்த கூட்டத்துக்கு மானாமதுரை ஊராட்சி ஒன்றியத் தலைவர் கே.தங்கமணி தலைமை வகித்தார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

சிவகங்கை மாவட்டத்தில் வைகைப் பாசனப் பகுதியில் விரகனூர் மதகு அணை வலது, இடது பிரதான கால்வாய்கள் மூலமாகவும் பார்த்திபனூர் மதகு அணை இடது பிரதான கால்வாய் மூலமாகவும் 98 கண்மாய் பாசன விவசாயிகள் 40 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்துள்ளனர்.

நடவு முடிந்து நாற்றுகள் பயிரான நிலையில் சில கண்மாய்களில் 10 முதல் 20 நாட்களுக்குத்தான் தண்ணீர் உள்ளது.

பெரும்பாலான கண்மாய்களில் சிறிதுகூட தண்ணீர் இல்லாத நிலை உள்ளது. தற்போது தண்ணீரின்றி பயிர்கள் கருகத் தொடங்கிவிட்டன.

இதனால் கடன் வாங்கி விவசாயம் செய்துள்ள விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

எனவே தண்ணீரின்றி கருகும் பயிர்களைக் காப்பாற்ற வைகை அணையிலிருந்து மேற்கண்ட பகுதிக்கு தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இக் கோரிக்கை குறித்து அனைத்துக் கட்சி பிரதிநிதிகள், விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் இம் மாதம் 12-ம் தேதி பொதுப்பணித்துறை அதிகாரிகளை சந்தித்துப் பேசி வலியுறுத்த முடிவு செய்யப்பட்டது.

மேலும், தொடர் நடவடிக்கையாக வைகையில் தண்ணீர் திறக்க வலியுறுத்தி விவசாயிகளைத் திரட்டி இம் மாதம் 20-ம் தேதி மானாமதுரை அண்ணா சிலை பைபாஸ் ரோடு பகுதியில் சாலை மறியல் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் எம்.அர்ச்சுணன், எம்.கந்தசாமி, பி.அய்யனார், விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கே.இருளப்பன், எஸ்.மணி, ஏ.கே.ஆறுமுகம், கே.அழகர்சாமி, ஏ.முத்துராமலிங்கம், என்.எஸ்.முத்துராமலிங்கம்( ஏ.ஐ.டி.யு.சி), கே.கருப்புச்சாமி(விவசாயத் தொழிலாளர் சங்கம்), கிராம விவசாய சங்க நிர்வாகிகள் ஜி.வெள்ளைத்துரை, ஜி.சங்கையா, சீனி அழகுமாணிக்கம் மற்றும் விவசாயிகள், அரசியல் கட்சியினர் திரளாகக் கலந்துகொண்டனர்.

### கிராமப் பொருளாதாரத்துக்கு புத்துயிரூட்டும் ஆடு வளர்ப்பு தொழில்

வி.ஆர்.பழனிசாமிFirst Published : 11 Jan 2010 07:15:14 AM IST
Last Updated :

வெள்ளக்கோவில், ஜன.10: குறைந்த முதலீட்டில், நிரந்தர வேலைவாய்ப்பளித்து கிராமப்புற பொருளாதாரத்துக்கு ஆடு வளர்ப்புத் தொழில் புத்துயிரூட்டி வருகிறது.

சம்பளத்துக்காக வேலைக்குப் போகாமல், கிராமப்புறங்களில் சுய தொழிலாக பலர் செம்மறி ஆடு, வெள்ளாடுகளை வளர்த்து வருமானத்தைப் பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு அரசின் கால்நடை பராமரிப்புத் துறை கணக்கெடுப்பின்படி மாநிலத்தில் 55 லட்சத்து 93ஆயிரம் செம்மறி ஆடுகளும், 81 லட்சத்து 77 ஆயிரம் வெள்ளாடுகளும் உள்ளன.

ஆடுகள் இறைச்சிக்காகவும்,தோல் உற்பத்திக்காகவும்,சில வகை இனங்கள் உரோமத்துக்காகவும் பயன்படுகின்றன. தமிழ்நாட்டு மக்கள் வெள்ளாட்டு இறைச்சியை மிகவும் விரும்பிச் சாப்பிடுகின்றனர். இதன் விலையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

செம்மறி ஆடுகளில் குறும்பாடு,மலபாரி,மேச்சேரி,வேம்பார்,திருச்சி கருப்பு,சென்னை சிவப்பு,ராமநாதபுரம் வெள்ளை இனங்கள் உள்ளன. அந்தந்தப் பகுதியின் தட்ப வெப்ப நிலை, மேய்ச்சல், விற்பனை வாய்ப்பு போன்றவற்றை கருத்தில் கொண்டு, தகுந்த இனத்தை தேர்ந்தெடுத்து வளர்க்க வேண்டும்.

தமிழ்நாட்டில் பெரும்பாலான வறட்சியான மாவட்டங்களில் மேச்சேரி இனம் வளர்க்கப்படுகிறது. இரண்டு குட்டிகள் போடும் ஆடுகளின் வம்சத்திலிருந்து வளர்ப்பு ஆடுகளைத் தேர்ந்தெடுத்தால் கூடுதல் வருமானம் கிடைக்கும். 80 சதவீத ஆடுகள் மழைக் காலத்திலும், 20 சதவீத ஆடுகள் கோடை காலத்திலும் பருவ நிலையை அடைந்து, இனப்பெருக்கத்துக்குத் தயாராகின்றன.

தரமான உள்நாட்டு இன கிடாக்களை இனப்பெருக்கத்துக்கு பயன்படுத்த வேண்டும்.சினைக்காலம் சராசரியாக ஐந்து மாதங்களாகும். நான்கு மாத குட்டி 15-20 கிலோ எடை அளவுக்கு வளர்ந்து, இரண்டாயிரம் ரூபாய் வரை விற்பனையாகிறது. வளர்ப்பதற்கு தேவைப்படும் பெட்டை குட்டிகள் 18 மாதங்களுக்கு முன்பாகவே முதிர்ச்சியடைந்து இனப்பெருக்கத்துக்கு தயாராகின்றன.

தமிழ்நாட்டில் வளர்க்கப்படும் வெள்ளாடுகளில் பள்ள ஆடு,சேலம் கருப்பு,கன்னி ஆடு,கொடி ஆடு,சாணன் போன்ற இறைச்சிĺக்கான இனங்கள் காணப்படுகின்றன. தினமும் இரண்டு லிட்டர் வரை பால் தரக்கூடிய ஜமுனாபாரி, தலைச்சேரி இனங்களும் ஆங்காங்கே உள்ளன. இனப்பெருக்கத்துக்கு அதிக உற்பத்தித் திறன் கொண்ட,பெட்டை ஆடு மற்றும் கிடாக்களை அவற்றின் பாரம்பரியத்தைக் கொண்டு தேர்வு செய்ய வேண்டும். வெள்ளாடுகள் இரண்டு வருடத்தில், மூன்று முறை தலா மூன்று குட்டிகள் வரை ஈனும். குட்டிகளும் இறைச்சிக்காக நல்ல விலைக்கு விற்பனையாகிறது.

பொதுவாக ஆடுகளை திறந்த வெளியில் இடம்விட்டு, இடம் மாற்றக்கூடிய வகையில் பட்டிகள் அமைத்து இரவு நேரத்தில் தங்க வைப்பது சிறந்தது. வெள்ளாடுகளுக்கு நல்ல முறையில் அமைக்கப்பட்ட கொட்டகையையும் பயன்படுத்தலாம். சாதாரணமாக கிடைக்கும் மேய்ச்சல் வகைகளே போதுமானது. தேவைப்பட்டால் கோதுமை தவிடு, அரிசி தவிடு, கடலைப் புண்ணாக்கு,மக்காச்சோளம்,சோளம்,கொள்ளு, நரிப்பயிறு போன்ற சத்துணவுகளை கொடுக்கலாம்.

வறட்சியான காலங்களில் உணவுப் பற்றாக்குறையைப் போக்க,இக்காலத்திலும் பசுமையாக வளரும் வேலமரம்,வேம்பு,கொடுக்காப்புளி,பூவரசு,அத்தி மரம்,ஆலமரம்,இலந்தை போன்ற இருபதுக்கும் மேற்பட்ட மரவகைகளின் இலைகளை கொடுக்கலாம்.

காராமணி,சணப்பு,முயல்மசால்,வேலிமசால் தீவன பயிர்களும்,கம்பு,பாராப்புல்,கினியாப்புல் போன்ற புல் வகைகளும் உணவாகப் பயன்படுகின்றன. ஆடுகளுக்கு கொசு,உனி,அசுவினி ஒட்டுண்ணிகளால் ஏற்படும் பெருமளவு நோய்த் தாக்குதலை சுகாதாரமான பராமரிப்பு மற்றும் குடற்புழு நீக்கம் மூலம் கட்டுப்படுத்தலாம்.

தொண்டை அடைப்பான்,பிபிஆர்,ஆட்டம்மை,துள்ளுமாரி,கோமாரி நோய்களுக்கு தடுப்பூசியும்,நீலநாக்கு நோய்க்கு தகுந்த சிகிச்சையும் அளிக்க வேண்டும். அரசு மற்றும் தனியார் துறைகளில் அறிமுகப்படுத்தப்படும் புதிய முறைகளை தயங்காமல் பின்பற்ற வேண்டும்.

இவ்வாறு விவசாயம் சார்ந்த துணைத் தொழிலாக ஆடு வளர்ப்புத் தொழில்,கிராமப்புற மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

### வேளாண் இடுபொருள் வழங்கும் விழா

First Published : 11 Jan 2010 01:06:11 AM IST
Last Updated :

கும்மிடிப்பூண்டி, ஜன. 10: கும்மிடிப்பூண்டியை அடுத்த பாதிரிவேட்டில், செம்மை நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள் வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

பாதிரிவேடு வேளாண்மை விரிவாக்க மையத்தில் தேசிய வேளாண் நிறுவனத்தால் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சிக்கு, மாதர்பாக்கம் ஊராட்சித் தலைவர் சகுந்தலா கஜேந்திரன் தலைமை தாங்கினார். விழாவில் கும்மிடிப்பூண்டி துணை வேளாண்மை அலுவலர் பி.சேகர், உதவி வேளாண்மை அலுவலர் என்.சிவகுமார் முன்னிலை வகித்தனர்.

விழாவில், செம்மை நெல் சாகுபடியில் ஈடுபட்டுள்ள 50 விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு தலா ரூ.3 ஆயிரம் அளவில் அசோஸ் பைரில்லம், பாசோ பாக்டீரியம், நீலப்பசும் பாசிகள், நுண்ணூட்ட உரம், சூடோமோனாஸ் போன்ற உரங்களும், மார்க்கர் என்ற நடவு அடையாள கருவியும், போனா லீடர் என்ற களை எடுக்கும் கருவியும் மாதர்பாக்கம் ஊராட்சித் தலைவர் சகுந்தலா கஜேந்திரனால் வழங்கப்பட்டது.

விழாவில், சிறப்புரையாற்றிய பாதிரிவேடு ஊராட்சித் தலைவர் மாலா சேகர் குறிப்பிடுகையில்,

விவசாய மன்றங்களில் இணைந்துள்ள விவசாயிகளுக்கு வேளாண்மையை பெருக்கும் விதமாக இது போன்ற உதவிகள் வழங்கப்படுவதால் பல்வேறு கிராமங்களிலும் விவசாய மன்றங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என தெரிவித்தார்.

விழா ஏற்பாடுகளை தேசிய வேளாண் நிறுவனத்தைச் சேர்ந்த கஜேந்திரன் செய்திருந்தார். விழாவில் மாதர்பாக்கம், பூதூர், நேமலூர், பாதிரிவேடு, மாநெல்லூர், கண்ணன்கோட்டை பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தினமலர்

## பொள்ளாச்சியில் மல்லிகைப்பூ கிலோ ரூ.1,000

ஜனவரி 11,2010,03:35



பொள்ளாச்சி: பொள்ளாச்சி பூ மார்க்கெட்டில் ஒரு கிலோ மல்லிகைப்பூ கிலோ ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது; வரத்து குறைந்ததால் கேரள மாநிலத்திற்கு பூ அனுப்புவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பொள்ளாச்சிக்கு கடந்த ஒரு மாதமாக பூ வரத்து குறைந்துள்ளது. தினசரி இரண்டாயிரம் கிலோ வரை பூ வரத்து இருந்தது. பனிப்பொழிவு காரணமாக பாதியாக வரத்து குறைந்துள்ளது. மூன்று நாட்களாக வரத்து குறைந்திருப்பதால், பூக்களுக்கு கடுமையான கிராக்கி ஏற்பட்டுள் ளது. பூ வியாபாரிகள் போட்டி போட்டு பூக்களை ஏலம் எடுப்பதால், விலையும் எகிறி வருகிறது. நேற்று முன்தினம் ஒரு கிலோ மல்லிகைப்பூ ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது.

பூ வியாபாரிகள் கூறியதாவது: இரு நாட்களாக 200 கிலோ மல்லிகை மட்டுமே விற்பனைக்கு வந்தது. இதுவரை மல்லிகை அதிகபட்சமாக 500 ரூபாய் வரையில் மட்டுமே விலை போனது. ஜனவரி துவக்கத்தில் 700 ரூபாய்க்கு விற்பனையான நிலையில், நேற்று முன்தினம் கிலோ ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது. மேலும், விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், கேரள பகுதிகளுக்கு மல்லிகை அனுப்புவதை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளோம். இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

**மஞ்சள் விளைச்சல் அமோகம்**

ஜனவரி 11,2010,03:34



மேலூர்: பொங்கல் பண்டிகையை எதிர்நோக்கி, மதுரை மாவட்டம் மேலூர் பகுதியில் அதிகளவு மஞ்சள் பயிர் செய்யப்பட்டுள்ளது. மேலூர் அருகே சருகுவலையபட்டி, குறிச்சிபட்டி, சாத்தமங்கலம் மற்றும் தனியாமங்கலம் பகுதியில் மஞ்சள் அதிகளவு பயிர் செய்யப்பட்டுள்ளது. பொங்கலுக்காக பயிர் செய்யப்பட்டுள்ள நாட்டு மஞ்சளுடன், 'ஐபிரீடு' மஞ்சளும் இங்கு அதிகம் காணப்படுகிறது.

பொங்கல் நேரத்தில், நாட்டு மஞ்சள் மட்டும் விற்பனையாகும். வியாபாரிகள் இவற்றை மொத்தமாக வயலில் விலை பேசி எடுத்து விடுகின்றனர். அதிக பராமரிப்பு தேவை இல்லாத, இந்த விவசாயத்தில், இந்த ஆண்டு நல்ல விலை கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர். 'ஐபிரீடு' மஞ்சள்: ஐபிரீடு மஞ்சளுக்கு ஆண்டு தோறும் தேவை உள்ளது. இவ்வகை மஞ்சளை தோண்டி எடுத்து, அவித்து, பதப்படுத்தி விற்பனை செய்கின்றனர். சருகுவலையபட்டி விவசாயிகள், ஈரோட்டிற்கு சென்று மஞ்சளை விற்கின்றனர். சில ஆண்டுகள் வரை குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய் மட்டுமே கிடைத்து வந்த இம் மஞ்சளுக்கு, கடந்த ஆண்டு 5,000 ரூபாய் விலை கிடைத்தது. இந்த ஆண்டில் அதிகபட்சமாக 17 ஆயிரம் ரூபாய் வரை விற்பனை ஆகி உள்ளது. இதனால், இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

### பழரசம் தயாரிக்க பயிற்சி : பங்கேற்க பல்கலை அழைப்பு

கோவை : "வணிக முறையிலான பழப்பொருள் தயாரித்தல்' பயிற்சி, தமிழ்நாடு வேளாண் பல்கலை சார்பில், வரும் 19 மற்றும் 20ம் தேதி அளிக்கப்படுகிறது.
வேளாண் பல்கலை அறிக்கை: பழரச பானம், தயார் நிலை பானம், பலவகை பழ ஜாம், உலர வைக்கப்பட்ட பழங்கள், ஊறுகாய், ஊறுகனி தயாரிப்பு குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆர்வமுள்ளவர்கள் 1,000 ரூபாய் செலுத்தி பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும். பயிற்சி கட்டணத்தை, முதல்வர் (வேளாண் பொறியியல்), கோவை என்ற முகவரியில் வங்கியில் "டி.டி.,' எடுத்து, பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண் பல்கலை, கோவை-3, என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்; ஜன., 18ம் தேதி முன் பதிவுக்கு கடைசி நாள்.இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மூலிகை ஆராய்ச்சிக்கு மத்திய அரசு நிதிஉதவி

பொள்ளாச்சி : பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரியின் உயிர் தொழில்நுட்பத்துறையில் நடக்கவுள்ள மூலிகை ஆராய்ச்சிக்கு மத்திய அரசு 12 லட்ச ரூபாய் நிதியுதவி வழங்கியுள்ளது.

என்.ஜி.எம்., கல்லூரி முதல்வர் ராஜ்குமார் வெளியிட்டுள்ள அறிக்கை: கல்லூரியில் கணிதம், இயற்பியல், தாவரவியல் போன்ற பல துறை சார்பில் டாக்டர் பட்ட ஆராய்ச்சிகள் நடக்கின்றன. இதில், உயிர் தொழில்நுட்பத்துறையை சார்ந்த கவிதா, மேற்குத்தொடர்ச்சிமலை மூலிகைகளின் மருத்துவ வேதிப்பொருட்கள்' என்ற தலைப்பில் ஆராய்ச்சி திட்டத்தை சமர்பித்திருந்தார். திட்டத்தை ஆராய்ந்த மத்திய அரசின் வல்லுநர் குழு, செயல்படுத்துவதற்காக 12 லட்ச ரூபாய் வழங்குமாறு உத்தரவிட்டுள்ளது.
தற்போதுள்ள தடுப்பு மருந்துகளால் கட்டுப்படுத்த முடியாத, நுண்ணுயிரிகளை கட்டுப்படுத்தும் புதிய தாவர வேதிப்பொருட்களை கண்டுபிடித்து ஆய்வறிக்கை சமர்பிக்கப்படவுள்ளது. மத்திய அரசின் நிதி உதவி இந்த முதன்மை ஆய்வாளருக்கு கல்லூரி தலைவர் கிருஷ்ணராய் வாணவராயர் உட்பட பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**வேளாண் பல்கலை மலர் கண்காட்சி நிறைவு**

கோவை : கோவை, வேளாண் பல்கலை தாவரவியல் பூங்காவில் கடந்த இரண்டு நாட்களாக நடந்த மலர் கண்காட்சி நேற்று நிறைவடைந்தது.
நேற்று மாலை பூங்காவில் நடைபெற்ற நிறைவு விழாவில் பல்கலை தோட்டக்கலைத்துறை பேராசிரியர் ஜவர்கர்லால் வரவேற்றார். போலீஸ் கமிஷனர் சிவனாண்டி தலைமை வகித்தார். மலர் கண்காட்சியில் கல்வி நிறுவனங்கள் சார்பில் பூங்கா, ரூப் கார்டன், பொதுபூங்கா, அரசு நிறுவனங்கள் பூங்கா, கார்ப்பரேட் கார்டன், பண்ணை வீடு பூங்காக்கள் அமைப்பது குறித்த போட்டிகள் நடந்தன. பள்ளி குழந்தைகளுக்கு ஓவியம் தீட்டுதல், கல்லூரி மாணவர்களுக்கு செய்யுள் எழுதுவது உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன.

கல்லூரிகளுக்கிடையே பூங்கா அமைத்தல் போட்டியில் ஸ்ரீ கிருஷ்ணா இன்ஜி., கல்லூரி முதலிடத்தையும், ஜான்சன்ஸ் மேலாண்மை கல்லூரி இரண்டாம் இடத்தையும், கிருஷ்ணா கலை, அறிவியல் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றன. பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு போலீஸ் கமிஷனர் சிவனாண்டி பரிசு வழங்கினார். வேளாண் பல்கலை துணை வேந்தர் முருகேச பூபதி, போலீஸ் துணை கமிஷனர் நாகராஜ், பல்கலை தோட்டக்கலைத்துறை டீன் குமார், ரோட்டரி சங்க துணை ஆளுநர் கணேசன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## அறுவடை நேரத்தில் மழை பெய்ததால் விவசாயிகள் தவிப்பு! : மெஷினால் முடியாது; ஆட்கள் கிடைப்பார்களா?

கடலூர் : மாவட்டத்தில் கடந்த இரு நாட்களாக பெய்த மழையால் இன்னும் 4 முதல் 5 நாட்களில் அறுவடைக்கு தயாராக இருந்த சம்பா நெல் அறுவடைக்கு மெஷினை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே விவசாயத் திற்கு ஆள் பற்றாக்குறையால் அறுவடைக்கு ஆட் கள் கிடைப்பார்களா என விவசாயிகள் தவிப்பில் உள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில் 2 லட்சத்து 50 ஆயிரம் ஏக் கர் சம்பா நெல் பயிரிடப் பட்டது. ஜனவரி முதல் தேதியிலிருந்து அறுவடை துவங்கியது. கடந்த 10 நாட்களில் அண்ணாகிராமம், கம்மாபுரம்  மற்றும் காட்டுமன்னார்கோவில் ஒன்றியத்தில் வடவாறு பாசன வாய்க்கால் உள் ளிட்ட மாவட்டத்தின் பல் வேறு பகுதி விவசாயிகள் 25 ஆயிரம் ஏக்கர் வரை நெல் அறுவடை செய்துள் ளனர்.
கடந்த 2 நாட்களாக பெய்த மழை காரணமாக நெல் அறுவடை செய்த மற்றும் அறுவடைக்கு தயாராக உள்ள விவசாயிகளும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர். அறுவடை செய்த நெல்லை வியாபாரிகளிடம் விற்பனை செய்ய முடியாத நிலையிலும் பாதி அறுவடை செய்தும் பாதி அறுவடை செய்யாமலும் உள்ள நிலையில் அறுவடை பணிகளும் பாதிக் கப்பட்டுள்ளது.
விருத்தாசலம், பெண் ணாடம், குள்ளஞ்சாவடி, வடலூர், மருவாய், பில் லாலி, சேத்தியாத்தோப்பு, பண்ருட்டி உள்ளிட்ட பல பகுதிகளில் அறுவடை செய்யப்படாத இன்னும் 4, 5 தினங்களில் அறுவடை செய்ய தயாரான நிலையில் உள்ள நெற் பயிர்கள் மழையால் கதிர்கள் சாய்ந்து நிலத்தில் படுத்து விட்டது.  இப்படிப்பட்ட நிலங்களில்

இனி மெஷினை வைத்து அறுவடை செய்ய முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. மேலும் நிலத்தில் ஈரப்பதம் ஏற்பட்டுள்ளதால் மெஷினை இறக்க முடியாது.

இந்த நிலையில் ஆட்களைக் கொண்டுதான் அறுவடை செய்ய வேண்டும். ஆனால் தற்போது விவசாயத்திற்கு ஆட்கள் பற்றாக் குறை உள்ள நிலையில் அறுவடைக்கு ஆட்கள் கிடைத்து உரிய காலத்தில் அறுவடை செய்ய முடியுமா என விவசாயிகள் மத் தியில் கேள்வி எழுந் துள் ளது. இதே நிலை நீடித் தால் நிலத்தில் சாய்ந்த நெற் பயிர்களில் உள்ள நெல் மணிகள் உதிர்ந்து முளைக்கத் துவங்கி விடும்.

ஏற்கனவே பருவம் தவறிய மழை மற்றும் புகையான் தாக்குதலாலும், ஒரு லட்சம் ஏக்கரில் பயிரிடப் பட்ட "பிபிடி' ரக விதை நெல்லில் ஏற்பட்ட கலப்படத்தாலும் விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர். அதுமட்டுமின்றி மழையில் நனைந்து நிறம் மாறுவதாலும் அறுவடை செய்தாலும் குறைந்த விலைக்குத் தான் விற்க முடியும். நேரடி நெல் கொள் முதல் நிலையங்களில் எடுப்பதாக இருந்தால் கூட 22 சதவீதம் ஈரப்பதம் இருக்க வேண்டும். ஆனால் தற் போது 15 சதவீதம்தான் இருக்கிறது. ஈரப்பதம் அதிகமானால் லாபம் கிடைக் கும். குறைந்தால் நஷ்டம் ஏற்படும் என்ற நிலையில் ஈரப்பதத்தின் சதவீதத்தை கூட்ட நெல்லை காய வைக்க களம் கூட இல் லாத நிலை உள்ளது.

இதுபற்றி விவசாயிகள் கூறுகையில் "எந்த ஆண் டும் இல்லாத அளவில் இந்த ஆண்டு நெல் பயிரிட்ட விவசாயிகள் பல் வேறு இன்னல்களை சந்திக்க நேர்ந்துள்ளது. இதுவரை அறுவடை செய் துள்ள விவசாயிகள் 50 சதவீதம் நஷ்டத்தை சந்திக்க நேர்ந்துள்ளது. மழை இன்னும் நீடித்தால் இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை மகிழ்ச்சியாக கொண்டாட முடியாத நிலை ஏற்படும்' என சோகத்துடன் தெரிவித்தனர்.

மண் பாண்ட தொழிலாளர்களுக்கும் பாதிப்பு : கடந்த இரண்டு நாட்களாக பெய்த மழையால் சம்பா நெல் பயிரிட்ட விவசாயிகள் மட்டுமின்றி மண் பானை செய்யும் குயவர்களும் நஷ்டத்தை சந்திக்க நேர்ந்துள்ளது. பொங்கல் பண்டிகையையொட்டி கடந்த சில நாட்களாக ஜரூராக மண் பானைகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். பச்சை மண் பானைகளை சூளையில் வைத்து சுடுவதற்கு தயாரான நிலையில் திடீர் மழையால் சூளையில் வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் புதிய மண் பானைகள் தயாரிக்கும் பணியும் பாதித்துள்ளது.

### வேளாண் காப்பீடு திட்டத்தில் சேர விவசாயிகளுக்கு அழைப்பு

கடலூர் : தேசிய வேளாண் காப் பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தேசிய வேளாண் காப் பீட்டுத் திட்டத்தில் உணவுப்பயிர்கள் நெல், கேழ்வரகு, சோளம், பருத்தி, வெங்காயம் உள்ளிட்ட பயிர்கள் காப்பீடு செய்யப் படுகின்றன. இயற்கைச் சீற்றங்கள் மற்றும் பூச்சிகளால் ஏற்படும் மகசூல் இழப்புகளுக்கு காப்பீடு வழங்கப்படுகிறது.
குத்தகைதாரர்கள், வங் கிக்கடன் பெறுவோர் மற் றும் கடன் பெறாதோர் உட் பட அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். சராசரி மகசூலின் 150 சதவீதம் மதிப்பு வரை காப்பீடு செய்யலாம். இதில் பெரும் பங்காக விவசாயத்துறை பயிர்கடன் பெறா விவசாயிகளை கூட்டி அவர்களுக்கு விழிப் புணர்வை ஏற்படுத்தி விவசாயிகள் அவரவர் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் வங்கியிலேயே சேர்க்கப் படுகின்றனர்.

ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரத்திலும் மாநில அரசின் விவசாயத்துறையினரால் பயிர் அறுவடை காலத்தில் பதினாறு, பத்து பயிர் அறுவடை சோதனைகள் நடத்தப்பட்டு நடப்பு பருவத்தில் சராசரி மகசூலை ஒப்பிடும்போது நடப்பு பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைந்திருக்கிறதோ அந்த விகிதப்படி அவரவர் காப்பீடு செய்த தொகைக்கு ஏற்ப நஷ்ட ஈடு வழங்கப்படுகிறது. மேலும் தகவல்களுக்கு மண்டல மேலாளர் அக்ரிகல்ச்சர்

இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிட், தம்புச்செட்டித் தெரு, பாரிமுனை, சென்னை என்ற முகவரியில் தெரிந்து கொள்ளலாம்.

## நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மாவட்டத்தில் 114 இடங்களில் திறப்பு

கடலூர் : கடலூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு 114 நேரடி நெல் கொள் முதல் நிலையங்கள் திறக்கப்படுகிறது.

தமிழகத்தில் சம்பா நெல் அறுவடை துவங்கியுள்ளது. அறுவடை செய்யும் நெல்லை இடைத் தரகர்கள் இன்றி விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறந்து வருகிறது.

அதன்படி கடலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 112 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. இந்த ஆண்டு 114 கொள்முதல் நிலையங்கள் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி வீரப்பெருமாநல்லூர், சிறுவரப்பூர் பகுதிகளில் புதியதாக அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 5ம் தேதி பைத்தம்பாடி மற்றும் வீரபெருமாநல்லூரிலும் திறக்கப்பட்டுள்ளது. மேலும் காட்டுமன்னார்கோவில், விருத்தாசலம், திட்டக்குடி, கடலூர் தாலுக்காக்களில் நேற்று 66 கொள்முதல் நிலையங்கள் திறக்கப் பட்டது. சிதம்பரம் தாலுகாவில் 46 கொள்முதல் நிலையங்கள் வரும் 20ம் தேதி திறக்கப்பட உள்ளது.

## வேளாண் கருவிகள் கையாள பயிற்சி பதிவு செய்து கொள்ள அறிவிப்பு

சிதம்பரம் : வேளாண் கருவிகள் கையாள்வது குறித்த பயிற் சியில் சேர்ந்து பயனடைய தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம் என வேளாண் அதிகாரி அறிவித்துள்ளார்.

இது குறித்து சிதம்பரம் வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் பத்மநாதபன் விடுத் துள்ள செய்திகுறிப்பு: வேளாண் பொறியியல் துறை, சிதம்பரம் உதவி செயற்பொறியாளர் அலுவலகம் மூலம் வரும் 21ம் தேதி முதல் பிப்ரவரி 5ம் தேதி வரை பவர்டில்லர் பயன்பாடு மற்றும் பராமரிப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்பு நடக்கிறது. மேலும் மேம்படுத்தப் பட்ட பல வகையான வேளாண் கருவிகள் தெரிவு செய்தல், கையாளுதல் மற்றும் பராமரித்தல் குறித்து பயிற்சி வகுப்பு அடுத்த மாதம் 8ம் தேதி முதல் 22ம் தேதி வரையும் நடக்கிறது.

இந்த இரு பயிற்சி வகுப்புகளில் பங்கேற்க விருப்பம் உள்ள படித்த விவசாயிகள் பெயரை சிதம்பரம் வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் வரும் 19ம் தேதிக்குள் பதிவு செய்துக் கொள்ள வேண்டும்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

விருத்தாசலம் : விருத்தாசலம் வேளாண் பொறியியல் துறை அலுவலகத்தில் பயிர் பாதுகாப்பு கருவிகள் செயல்முறை பயிற்சி நடைபெற உள் ளது.
இதுகுறித்து வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் பத்மநாபன் விடுத்துள்ள செய்தி குறிப்பு: விருத்தாசலம் பூதாமூர் வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் பயிர் பாதுகாப்பு கருவிகளை தேர்வு செய்தல், இயக்குதல், பராமரித்தல் குறித்து விவசாயிகளுக்கு செய்முறை பயிற்சி அளிக் கப்பட உள்ளது. வரும் 21ம் தேதி முதல் வரும் 5ம் தேதி வரை நடைபெறும் செயல்முறை பயிற்சியில் அடிப்படை கல்வி தகுதியுடைய, 20 வயதிற்கு மேற் பட்ட சிறு, குறு விவசாயிகள், மகளிர்கள் கலந்து கொள்ளலாம். ஆர்வமுள்ள விவசாயிகள் வேளாண் பொறியியல் துறை அலுவலகத்தில் வரும் 18 ம் முதல் 20 ம் தேதிக்குள் தங்களது பெயரை நேரில் வந்து பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்திக்குறிப் பில் கூறப்பட்டுள்ளது.

### கர்நாடக தக்காளி வரத்து பண்ருட்டியில் அதிகரிப்பு

பண்ருட்டி : பண்ருட்டி காய்கறி மார்க்கெட்டிற்கு கர்நாடகா மாநில தக்காளி வரத்து அதிகரித்துள்ளது. தமிழகத்தில் தற்போது தக்காளி சீசன் இல்லாததால், ஆந்திர மாநிலத்திருந்து தக்காளி கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. ஆந்திராவில் ஏற்பட்டுள்ள தெலுங்கானா கலவரத் தால் தக்காளி வரத்து தடைபட்டதால் தமிழகத்தில் தக்காளி விலை உயர்ந்தது.
தற்போது கர்நாடக மாநிலம் பெங்களூருவை அடுத்த தாவணிக்கரை பகுதியில் தக்காளி அறுவடை துவங்கியுள்ளது. இங்கிருந்து பண்ருட்டி பகுதி காய்கறி வியாபாரிகள் தக்காளியை கொள்முதல் செய்யத் துவங்கியுள்ளனர். கர்நாடகாவிலிருந்து மரப்பெட்டிகளில் கொண்டு வரப்படும் தக்காளியை பிளாஸ்டிக் டப் பாக்களில் (சுமார் 15 கிலோ) மாற்றி 150 ரூபாயிற்கு விற்பனை செய் கின்றனர். சில்லரை விற்பனையில் கிலோ 14 ரூபாயிற்கு விற்கப்படுகிறது

### விவசாய கண்காட்சியில் பங்கேற்க அழைப்பு

திண்டுக்கல்: ஜன., 23ம் தேதி முதல் 26ம் தேதி வரை திண்டுக் கல் டட்லி மேல்நிலைப் பள்ளியில் நடக்கும் விவசாய கண்காட்சியில் விவசாயிகள் பங்கேற்று தங்கள் திறனை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என கலெக்டர் வள்ளலார் அழைப்பு விடுத்துள்ளார்.திண்டுக்கல்லில் நடந்த விவசாயிகள் குறைகேட்பு கூட்டத்தில் அவர் பேசியதாவது: இன்டர்நெட் மூலம் அனைத்து ஊராட்சிகளும் இணைக்கப்பட உள்ளது. இந்த பணி முடிந்ததும் விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளை ஊராட்சியில் இருந்த படியே கலெக் டரிடம் வழங்க முடியும். பதில்களும் இன்டர்நெட்டிலேயே வழங்கப்படும். திண்டுக்கல் டட்லி மேல்நிலைபள்ளியில் ஜன., 23ம் தேதி முதல் 26ம் தேதி வரை விவசாய கண்காட்சி நடக்கிறது.

சர்வதேச அளவிலும், தேசிய அளவில் முக்கியத்துவம் பெற்ற பெரிய கம்பெனிகள் புதிய தொழில் நுட்பங்கள் குறித்த அரங்குகளை அமைத்து விவசாயிகளுக்கு விளக்க உள்ளனர். தினமும் விவசாயத்துறையினை சார்ந்த விஞ்ஞானிகளின் கருத்தரங்குகள் நடக்க உள்ளது. எனவே விவசாயிகள் பங்கேற்று தங்கள் திறனை மேம்படுத்திக் கொள்ள வேண் டும். இவ்வாறு பேசினார்.ஒட்டன்சத்திரம் சடையன்குளம் பாதை ஆக்கிரமிப்பை அகற்ற கலெக்டர் உத்தரவிட்டார். காந்திகிராம விவசாய அறிவியல் மைய திட்ட உதவியாளர் ஹிகின்தாஜ் இயற்கையாகவே கொண்ட பொருட் களை கொண்டு தயாரிக்கப்பட்ட மருந்துகளை பயன்படுத்துவது குறித்து விளக்கினார்.

### திண்டுக்கல் உழவர்சந்தையில் காய்கறி விலை கடும் உயர்வு வியாபாரிகள் நுழைந்ததால் விளைவு

திண்டுக்கல்,:ஏழை விவசாயிகளுக்கு உரிய பலன்,நேரடியாக கிடைக்கும் வகையில் உழவர் சந்தை திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது. சுற்று வட்டார கிராம விவசாயிகள், தங்கள் விளைபொருட்களை நேரடியாக விற்பதற்கான வாய்ப்பு உருவானது. முன்னதாக காய்கறிகள் மட்டுமே விற்பனை செய் யப்பட்டு வந்தது. பொதுமக்களிடையே கிடைத்த வரவேற்பு காரணமாக, இங்கு முட்டை, பால், பழங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத் திப் பொருட்கள் மற்றும் மருத்துவ குணமுள்ள பான ங்கள் உள்பட விற் பனை செய்யப்படும் பொருட்களின் எண்ணிக் கை அதிகரிக்கப்பட்டுள் ளது.திண்டுக்கல் உழவர் சந்தையில், 70க்கும் மேற் பட்ட கடைகள் உள்ளன. ஆனால் இங்கு விவசாயிகள் தவிர, வியாபாரிகளும் தங்கள் "கைவண்ணத்தை' காட்டி வருகின்றனர். அரசியல் செல்வாக்கு காரணமாக, இதற்கான அடையாள அட்டையை பெற்று வைத்துள்ளனர். இதனை பயன்படுத்தி, காந்தி மார்க்கெட்டில் இரு ந்து காய்கறிகளை வாங்கி வருகின்றனர். அவற்றை உழவர் சந்தையில் கூடுதல் விலைக்கு விற்று "வருமானம்' பார்த்து வருகின்றனர். இப் பிரச்னையை உயர் அதிகாரிகள் கண்டுகொள்வதில்லை.இதனால்

பழநி உழவர் சந்தையை விட, பெரும்பாலான பொருட்களின் விலை திண்டுக்கல் உழவர் சந்தையில் அதிகமாக உள்ளது.

### வெல்லம் மூட்டைக்கு ரூ.100 உயர்வு

ஈரோடு:பொங்கல் பண்டிகை நெருங்கியதால் வெல்லம் விலை மூட்டைக்கு 100 ரூபாய் அதிகரித்துள்ளது.ஈரோட்டில் முள்ளாம்பரப்பு, அம்மாபேட்டை, வடபழனி, பிழிக்கல்பாளையம் ஆகிய இடங்களில் வெல்லமும், கோபி, கவுந்தப்பாடி, அலங்கியம், பவானி ஆகிய இடங்களில் நாட்டு சர்க்கரையும் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் நாட்டு சர்க்கரை, வெல்லம் ஆகியவை கவுந்தப்பாடி, சித்தோடு ஆகிய இரு சந்தைகளுக்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

சென்றாண்டு ரேஷன் கடை மூலம் பொங்கல் பரிசுப் பொருளுக்காக தமிழக அரசு சார்பில் வெல்லம் கொள்முதல் செய்யப்பட்டது. நடப்பாண்டிலும் அரசு சார்பில் வெல்லம் கொள்முதல் செய்யப்படும் என்ற நம்பிக்கையில் வெல்லம் உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. ஆனால், அரசு சார்பில் வெல்லம் கொள்முதல் செய்யப்படவில்லை.சில வாரங்களாக வெல்லம் ஒரே சீரான விலையில் விற்கப்பட்டது.

பொங்கல் பண்டிகை நெருங்கி விட்டதால் வெல்லம், சர்க்கரை தேவை அதிகரித்துள்ளது. வெல்லம், நாட்டு சர்க்கரை ஆகியவற்றின் விலை மூட்டைக்கு 100 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.நேற்று 1,500 முதல் 1,580 வரை விற்கப்பட்ட 60 கிலோ கொண்ட நாட்டு சர்க்கரை மூட்டை 1,550 ரூபாய் முதல் 1,600 ரூபாயாகவும், 860 ரூபாய்க்கு விற்ற 30 கிலோ உருண்டை வெல்லம் 930 ரூபாய் முதல் 970 ரூபாயாகவும், 1,000 ரூபாய்க்கு விற்கப்பட்ட 30 கிலோ அச்சு வெல்லம் 1,100 ரூபாயாக உயர்ந்துள்ளது.

கவுந்தப்பாடி, சித்தோடு மார்க்கெட்டில் தமிழகம், ஆந்திரா, கர்நாடகா, ராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய பகுதிகளுக்கு தினசரி 25 லோடு முதல் 30 லோடு வரை சென்றன. பொங்கல் பண்டிகை முன்னிட்டு தற்போது 40 லோடுகள் செல்கின்றன.வெல்லம் விற்பனையாளர் ஒருவர் கூறியதாவது:சித்தோடு மற்றும் கவுந்தப்பாடி வெல்லம் மார்க்கெட்டுக்கு வெல்லம் அதிகளவில் வரத்தானதால் விலை சில வாரங்களாக சீராக இருந்தது. பொங்கல் பண்டிகை நெருங்கி விட்டதால் வெல்லம் தேவை அதிகரித்துள்ளது.

வெல்லம், நாட்டு சர்க்கரை, அச்சு வெல்லம் ஆகியவற்றின் விலை மூட்டைக்கு 100 ரூபாய் உயர்ந்துள்ளது.தமிழகம் மற்றும் வட மாநிலங்களுக்கு ஈரோடு மார்க்கெட்டில் இருந்து வெல்லம் அனுப்புவது அதிகரித்துள்ளது. தினசரி 30 லோடு வெல்லம் அனுப்புவது, தற்போது 40 லோடாக உயர்ந்துள்ளது.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெளியூரை சேர்ந்த தொழிலாளர்கள், தங்கள் சொந்த ஊருக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர். வெல்லம் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. தேவையான அளவு வெல்லம் இருப்பு இருக்கிறது.இவ்வாறு அவர் கூறினார்.

### காய்கறிகளில் உரம், பூச்சி மருந்து விஷம்:இயற்கை வேளாண் விஞ்ஞானி கவலை

ஈரோடு: சாப்பிடும் காய்கறிகள் அனைத்திலும் உரம், பூச்சி மருந்து மூலம் விஷம் கலந்துள்ளதால் நோய்கள் ஏற்படுவதாக," ஈரோட்டில் நடந்த விழாவில், இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேசினார்.ஈரோட்டில்

பரஞ்ஜோதி ஞானஒளி பீடம் அறக்கட்டளை என்ற உலக சமாதான ஆலயம் சார்பில், பரஞ்ஜோதி மகான் சத்யோதயத்தின் ஏழாம் திருநாள் விழா நடந்தது.

பரஞ்ஜோதி ஞானஒளிமகான் தலைமை வகித்தார். இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வாழ்வார் பேசியதாவது:உலகளவில் சமத்துவம், சமாதானம் வரவேண்டும். அடுத்தவர் கொடுத்த நன்கொடையை பிரித்து நன்கொடை கொடுப்பது நன்கொடை இல்லை. ஒருவர் தானாக உற்பத்தி செய்த பொருளை அடுத்தவர்களுக்கு வழங்குவது தான் நன்கொடை. அது உழவரால் தான் செய்யமுடியும். ஆனால் அதை உழவர் இப்போது செய்ய முடியாது.

வீட்டின் மாடிகளில் காற்கறி தோட்டம் அமைக்கலாம். இதன்மூலம் நாமே நமக்கு தேவையான காய்கறியை இயற்கை முறையில் உற்பத்தி செய்ய முடியும். தற்போது சாப்பிடும் காய்கறிகள் அனைத்திலும் உரம், பூச்சிமருந்து விஷம் கலந்துள்ளதால் மக்களுக்கு நோய்கள் ஏற்படுகிறது.அனைத்து பூச்சிகளுமே பயிர்களுக்கு சேதம் விளைவிப்பதில்லை. நன்மை செய்யும் பூச்சிகள் உள்ளன.

சிலந்தி செடியில் அமைக்கும் வலையில், பிற பூச்சிகள் சிக்குவதை சாப்பிடுகிறது. தட்டான் போன்ற நன்மை செய்யும் பூச்சிகள் அதிகம் உள்ளன. வியாபாரத்தை மையமாக வைத்து தற்போது பசுமை புரட்சி செய்கின்றனர். டிராக்டருக்கு டீஸல் விற்றவர்கள், பூச்சி மருந்து, உரம் விற்றவர்கள் எல்லாம் பணக்காரராகி விட்டனர்.

ஆனால் விவசாயி இன்னும் கடனாளியாகவே உள்ளான்.மனித ஆற்றலை வளர்ப்பது பகுத்தறிவு. இதில் இரண்டு பிரிவு உள்ளது. அறம் இருந்தாலும் நல்லது செய்ய வேண்டும். அது செய்யவிட்டால் பலன் இல்லை. இரண்டாவது மனித பண்பு. பிற உயிரை பாதுகாக்க வேண்டும். பயிர் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பூச்சியை கொல்கின்றனர்.

காய்கறிகள் பிற பகுதிகளிலிருந்து வருவதால், அதை எடுத்துவரும் லாரி புகையால் மாசு ஏற்படுகிறது. அதனால் மழையில்லை. நடவு நேரத்தில் பெய்ய வேண்டிய மழை அறுவடை நேரத்தில் பெய்கிறது. அந்தந்த பகுதியிலேயே முட்டைகோஸ், காலிஃப்ளவர் போன்ற காய்கறிகளை உற்பத்தி செய்ய முடியும்.

அறுவடை செய்த பின்பு பயிரின் கழிவை நிலத்தில் போட்டால், களை செடிகள் வளராது. அத்துடன் கழிவுகள் மக்கி உரமாகும். மாட்டுக்கு தவிடு, வைக்கோல் போன்ற கழிவுகளை போடுகிறோம். அது நமக்கு தேவையான பாலை தருகிறது. அரிசியில் மாவு மட்டும் தான் உள்ளது. ஆனால் பாலில் அனைத்து சத்தும் உள்ளது. இயற்கை நமக்கு அளித்ததை அதற்கு நாம் மீண்டும் அளிக்க வேண்டும். அழிந்த இயற்கையை மீண்டும் வளர்க்க வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

### கால்நடை வளர்ப்பு பயிற்சி

வெள்ளகோவில்: கால்நடை பராமரிப்புத்துறை நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் கால்நடை வளர்ப்பு பயிற்சி ஜனவரி 6ம் தேதியிலிருந்து 8ம் தேதி வரை வெள்ளகோவிலில் நடந்தது.கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை தடுப்பது குறித்தும், செம்மறி ஆடுகளை மழை, பனிக்காலங்களில் பராமரிக்கும் முறை குறித்தும், மர இலைகளை தீவனமாக பயன்படுத்துவது குறித்தும் பயிற்சியளிக்கப்பட்டது.

திருப்பூர் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் டாக்டர் கார்த்திகேயன், லாபகரமான முறையில் வெள்ளாடு வளர்த்தல் மற்றும் அடர்தீவன உற்பத்தி பற்றி பயிற்சியளித்தார்.கம்பளியம்பட்டி கால்நடை மருந்த டாக்டர் குழந்தசாமி தலைமை வகித்தார். வெள்ளகோவில் வட்டார டாக்டர் பிரகாஷம், டாக்டர்கள் தமிழ்செல்வன், கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**பூவன் ரக வாழைத்தாருக்கு கிராக்கி**

லாலாப்பேட்டை: பொங்கல் பண்டிகையால் பூவன் ரக வாழைக்கு கடும் கிராக்கி நிலவுவதால் நல்ல விலைக்கு விற்று வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தமிழகத்தில் வாழை உற்பத்தியில் கரூர் மாவட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. கிருஷ்ணராயபுரம், மாயனூர், திருக்காம்புலியூர், மகாதானபுரம், லாலாப்பேட்டை, குளித்தலை மற்றும் சுற்றுபகுதி கிராமங்களில் வாழை அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது.பூவன், ரஸ்தாலி, கற்பூர வள்ளி மற்றும் மொந்தன் ரக வாழைகள் உற்பத்தி செய் யப்படுகின்றன.

இந்த ஆண்டு வாழைக்கு சொல் லும் படி விலை ஒன்றும் இல்லை. தற்போது பொங்கல் பண்டிகை நெருங்கி வரும் வேளையில் தற்போது வாழை மார்கெட்டில் சூடு பிடிக்க துவங்கியுள்ளது. அதுவும் பூவன் ரக வாழை தார்களுக்கு ஏக கிராக்கி. தற்போதைய மார்கெட் நிலவரப்படி பூவன் ரக வாழை தார் சில்லறை விலையில் தார் ஒன்று ரூபாய் 75 முதல் ரூபாய் 150 வரை விற்பனை ஆகிறது. ரஸ்தாலி, கற்பூரவள்ளி தார்கள் மிக குறைந்த விலைக்கு போகிறது.அதேபோல் தூத்துகுடி மார்கெட் நிலவரப்படி 10 டன் கொண்ட (சுமார் 450 தார்கள்) பூவன் ரக வாழை ரூபாய் 70 ஆயிரம் முதல் ரூபாய் 90 ஆயிரம் வரை விற்கிறது.

ரஸ்தாலி மற்றும் கற்பூரவள்ளி தார்கள் 10 டன் ரூபாய் 25 ஆயிரம் முதல் ரூபாய் 30 ஆயிரம் வரை விலை போகிறது. இது சொல்லும் படி விலை கிடையாது. பூவன் ரக வாழைக்கு மட்டும் இன்றைய மார்கெட்டுகளில் நல்ல விலை கிடைக் கிறது.இது பொங்கல் பண் டிகை நெருங்க நெருங்க இன்னும் விலை உயர வாய்ப்பு இருக்கிறது என் கின்றனர் வியாபாரிகள்.இதுகுறித்து மொத்த வியாபாரிகள் புகழேந்தி, மதியழகன் ஆகியோர் கூறு கையில், பொங்கல் பண்டி கையை முன்னிட்டு பூவன் ரக வாழைக்கு மட்டும் நல்ல விலை கிடைத்து வருகிறது. மற்ற ரக வாழைக்கு விலையில்லை என்றனர்.பூவன் ரக வாழைக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டு நல்ல விலை கிடைத்து வரு வதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**நெல்பயிரை பாதுகாக்க என்ன செய்ய வேண்டும்?**

மதுரை: வாடிப்பட்டி வட்டாரத்தில் சாகுபடி செய்யப் பட்டுள்ள நெல் பயிர் வளர்ச்சிப் பருவத்தில் உள்ளது. இதில் இலைச் சுருட்டுப்புழு மற்றும் தண்டு துளைப்பான் தாக்குதல்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. தாக்குதல் காணப்படும் இடங்களில் குறைவான அளவு தழைச்சத்து உரங்களை இரண்டு, மூன்று முறையாக பிரித்து இடவேண்டும். பயிர் பாதுகாப்பாக இருக்க, ஏக்கருக்கு 400 மி.லி., மானோகுரோட்டோபாஸ் மருந்தை கைத்தெளிப்பான் மூலம் இலைகள் நன்கு நனையும்படி காலை, மாலையில் வெயில் குறைவான நேரங்களில் தெளிக்க வேண்டும்.கதிர்பருவத்தில் உள்ள நெற்பயிர்களில், கதிர்நாவாய் பூச்சிக்கு பயிர்பாதுகாப்பாக ஏக்கருக்கு பத்து கிலோ மாலத்தியான், 5 சதவீத பவுடரை மணலுடன் கலந்து காலையில் பனிப்பதத்தில் தூவ வேண்டும். அல்லது மாலத்தியான் ஒரு ஏக்கருக்கு 400 மி.லி., மருந்தை கைத்தெளிப்பானால் தெளிக்க வேண்டும். பயிர் பாதுகாப்பு தொடர் பான சந்தேகங்களுக்கு வாடிப்பட்டி விவசாய அலுவலர்கள் குணசேகரன், அம்பிகாபதியை அணுகி தெரிந்து கொள்ளலாம் என உதவி இயக்குனர் ராமநாதன் தெரிவித்தார்.

**ஆத்மா திட்டத்தில் திறன் வளர்ப்பு பயிற்சி**

மதுரை: கள்ளிக்குடியில் ஆத்மா திட்டத்தின் கீழ் வட்டார விவசாய குழுக்களுக்கான திறன்வளர்ப்பு பயிற்சி நடந்தது. கோபாலபுரம், இலுப்பக்குளம், தூம்பக்குளம், சித்தூர், ஓடைப்பட்டியை சேர்ந்த விவசாய குழுக்களுக்கு மண்வளம் பரிசோதனை, தென்னை சாகுபடி குறித்த நவீன தொழில் நுட்பங்கள், மண்புழு உரம், கம்போஸ்ட் உரம் தயாரிப்பு, காளான் வளர்ப்பு, பயறு வகை பயிர்களுக்கான நவீன தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப் பட்டது. உதவி இயக்குனர் சாரநாத்பாபு தலைமையில் விவசாய அலுவலர்கள் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**தண்ணீர் நிரம்பாத கண்மாய்களால் நிம்மதி இழந்த விவசாயிகள்**

திருப்பரங்குன்றம்: திருப்பரங்குன்றத்தை சுற்றியுள்ள கண்மாய்களில் தண்ணீர் முழுமையாக நிரம்பாததால், விவசாயிகள் நிம்மதி இழந்துள்ளனர். திருப்பரங்குன்றத்தை சுற்றி பானாங்குளம், ஆரியங்குளம், செவ்வந்திகுளம், ஆரியங்குளம், மேலநெடுங்குளம், தென்கால், நிலையூர் பெரிய கண்மாய்கள் உள்ளன. வைகை அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீர், இக்கண்மாய்களுக்கு வருகிறது.10 ஆயிரத்திற்கும் மேற் பட்ட நிலங்கள், பாசன வசதி பெறுகின்றன. கண்மாய்கள் முழுமையாக நிரம்பினால், இரண்டு போக விவசாயம் நடக்கும். இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை முழுமையாக பொய்த்துவிட்ட நிலையில், வடகிழக்கு பருவமழை லேசாக பெய்தது. இக்கண்மாய்களுக்கு, அணையிலிருந்து குறைந்த அளவே தண்ணீர் திறக்கப்பட்டதால், பாதி கண்மாய்கூட நிரம்பவில்லை. தென்கால் கண்மாயை பொறுத்தவரையில், முக்கால் கண்மாய் நிரம்பியது. இது ஒரு போக விவசாயத்திற்கு மட்டும் போதுமானதாக உள்ளது. நிலையூர் பெரிய கண்மாய், பானாங்குளம் கண்மாயிலிருந்து நான்கு வழிச்சாலைக்காக மண் எடுக்க ஒப்பந்ததாரருக்கு அரசு அனுமதியளித்தது. இவற்றில் பரவலாக அள்ளாமல், ஆங்காங்கே எடுக்கப்பட்டதால், மேடு பள்ளங்களாகிவிட்டது. அணைக்கு நீர் குறைவாக வந்ததால் பள்ளங்களில் தேங்கி நிற்கிறது.

பாதி கண்மாய்கள் மட்டுமே நிரம்பிய நிலையில், மடைப்பகுதியில் தண்ணீர் அளவு குறைவாக உள்ளது. இதனால் கண்மாய் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். ஒரு போக விவசாயத்திற்கே தண்ணீர் கிடைக்குமா, என்ற சந்தேகத்தில் விவசாயிகள் பணிகளை துவக்க தயக்கம் காட்டுகின்றனர். பள்ளமான நிலங்களில் மட்டும் பணிகள் துவங்கிவிட்டன. "வழக்கமாக புரட்டாசியில் நடவு செய்து கார்த்திகையில் அறுவடை நடக்கும். மழை இல்லாததாலும், கண்மாய்கள் முழுமையாக நிரம்பாததாலும் தற்போது மார்கழியில் நடவு செய்யப்படுகிறது. பங்குனியில் அறுவடை நடக்கும். பருவம் மாறி நடப்பதால் நெல் விளைச்சல் அதிகம் இருக்காது. அனைத்து நிலங்களிலும், விவசாயம் நடக்க அணையிலிருந்து தண்ணீர் திறக்க வேண்டும்' என அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

**நவீன வேளாண் கருவி உருவாக்க வேண்டும்: சந்திராயன் திட்ட இயக்குனர் தகவல்**

திருச்செங்கோடு : "விவசாயத்துக்கு ஏற்பட்டுள்ள ஆள் பற்றாக்குறையை சரி செய்ய நவீன கருவிகளை உருவாக்க வேண்டும்' என, சந்திராயன் திட்ட இயக்குனர் மயில்சாமி அண்ணாதுரை கூறினார். திருச்செங்கோடு கே.எஸ்.ஆர்., இன்ஜினியரிங் கல்லூரியில் மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை, மின்னணு தகவல் தொடர்புத்துறை சார்பில், "மின்னியல் அறிவியலின் தற்போதைய முன்னேற்றங்கள்' என்ற தலைப்பில் இரண்டு நாள் சர்வதேச கருத்தரங்கு மாநாடு நடந்தது. நிறைவு விழாவுக்கு, கல்வி நிறுவன தாளாளர் ரங்கசாமி தலைமை வகித்தார்.

அறக்கட்டளை செயலாளர் சீனிவாசன், இணைச் செயலாளர் கவிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சந்திராயன் திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை, சந்திரயான் 1 திட்டத்தின் செயல் குறித்து மாணவர்களுக்கு விளக்கினார். கருத்தரங்கில், மாணவ, மாணவியர் 195 ஆய்வுகட்டுரைகள் சமர்பித்தனர். பலநாடுகளை சேர்ந்த மின்னியல், மின்னணுவியல், மின்னணு தகவல்தொடர்பியல் துறை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட ஆராயச்சித்துறை மாணவ, மாணவியர் பங்கேற்று 195 ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வு கட்டுரைகளுக்கு பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து மயில்சாமி அண்ணாதுரை நிருபர்களிடம் கூறியதாவது: இந்தியாவில் அனைத்து துறைகளிலும் நல்ல வாய்ப்பும், எதிர்காலமும் உள்ளது. மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குப் பிடித்த துறையைத் தேர்ந்தெடுத்து திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். பிடித்தது கிடைக்காவிட்டால் கிடைத்ததை விரும்பி ஏற்றுக்கொள்ள வேண்டும். அதில் தொடர்ந்து உழைத்தால் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் பிரகாசமாக கிடைக்கும். சந்திரனுக்கு செல்வது, மருந்துகள் கண்டுபிடிப்பது மட்டும் அறிவியல் அல்ல. இயற்கை வழங்கியதை பாதுகாத்து கொள்வதும்

அறிவியல் தான். விவசாயம் ஒழுங்காக நடந்தால் தான் உலகம் செழிக்கும். விவசாயத்தை ஊக்குவித்தால் விவசாயம் பெருகும்.

இயற்கை வேளாண் குறித்த விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்ப வசதிகள் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டும். விவசாயிகள் விளைவிக்கின்ற உணவுப்பொருட்கள் துளிகூட சேதாரமில்லாமல் அனைத்தும் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும் வகையில், தொழில்நுட்ப அறிவு பெறவேண்டும். விவசாயத்துக்கு ஏற்பட்டுள்ள ஆள் பற்றாகுறையை சரி செய்ய நவீன கருவிகளை உருவாக்க வேண்டும். வெளிநாடுகளில் பலநூறு ஏக்கர் நிலத்தை 2 பேர் விவசாயம் செய்து வருவதைபோல், இந்திய விவசாயத்திலும் மாற்றம் வர வேண்டும்.

கேரளாவில் இஸ்ரோ நடத்தும் கல்லூரியில் 300 மாணவர்களுக்கு விண்வெளி ஆய்வு குறித்து கல்வி கற்பிக்கப்படுகிறது. விமான பயணத்தைப்போல், விண்வெளிப்பயணமும் எளிதாகிவிடும். விண்வெளிக்கு மனிதர்கள் சுற்றுலா செல்வதுபோல சுற்றிபார்க்க சென்று வரலாம். இந்தியா அனைத்து துறைகளிலும் முன்னேற்றமடையும். கார்களை இறக்குமதி செய்தோம்; தற்போது ஏற்றுமதி செய்கின்றோம். அதுபோல் அனைத்துதுறைகளிலும் முன்னேற்றமடைந்து ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு இந்தியா வளர்ந்துவிடும். இவ்வாறு அவர் கூறினார்.

## பசுந்தேயிலை வரத்து குறைந்தும் 'நோ யூஸ்!' : தொழிற்சாலை அங்கத்தினர்கள் 'அப்செட்'

மஞ்சூர் : தேயிலை வரத்து குறைந்தும், விலையில் முன்னேற்றம் இல்லாததால், கூட்டுறவு தொழிற்சாலை அங்கத்தினர்கள் விரக்தியடைந்துள்ளனர்.

மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் 2,500க்கும் மேற்பட்டோர் அங்கத்தினர்களாக உள்ளனர்; தோட்டத்தில் பறிக்கும் பசுந்தேயிலையை, தொழிற்சாலைக்கு வினியோகிக்கின்றனர். அக்டோபர், நவம்பர் மாதங்களில், தேயிலை வரத்து அதிகரித்ததால், அதிகளவு வினியோகிக்கப்பட்டது; இரு மாதங்களில் மட்டும், மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு, மாதம் 5 லட்சம் கிலோ வரை, அங்கத்தினர்கள் வினியோகித்தனர்.

கிலோவுக்கு 14 ரூபாய் நிர்ணயிக்கப்பட்ட நிலையில், டிசம்பர் மாதத்தில் துவங்கிய பனிப்பொழிவால், பசுந்தேயிலை வரத்து படிப்படியாக குறைந்தது. தற்போது, கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் நாளொன்றுக்கு 5,000 கிலோ வரை தான் பசுந்தேயிலை வினியோகிக்கப்படுகிறது. வரத்து குறைந்ததால், பசுந்தேயிலைக்கு கூடுதல் விலை கிடைக்கும் என அங்கத்தினர்கள் எதிர்பார்த்தனர்.

கடந்த டிசம்பர் மாதத்துக்கான பசுந்தேயிலை விலை நிர்ணயம், இரு நாட்களுக்கு முன், குன்னூர் இன்ட்கோ சர்வ் அலுவலத்தில் நடத்தப்பட்டது.  மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் உள்ள மஞ்சூர், பிக்கட்டி, கிண்ணக்கொரை, எடக்காடு, இத்தலார், மேற்குநாடு, மகாலிங்கம், கைக்காட்டி கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில், கடந்த நவம்பர் மாதத்துக்கான விலையே, டிசம்பர் மாதத்துக்கும் நிர்ணயிக்கப்பட்டது; இது, அங்கத்தினர்களிடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது; பலர், தனியார் தொழிற்சாலைகளை நாடிச் செல்ல திட்டமிட்டுள்ளனர்.

தொழிற்சாலை அங்கத்தினர் பீமன் கூறுகையில், ""தேயிலை வரத்து குறையும் போது, பசுந்தேயிலைக்கு மாதந்தோறும் நிர்ணயிக்கும் விலையை விட கூடுதலாக 2 ரூபாய் வழங்கப்படும். நவம்பர், டிசம்பர் மாதங்களில், தேயிலை வரத்து குறைந்த நிலையில், பசுந்தேயிலை விலையில் ஏமாற்றமே மிஞ்சியது,'' என்றார்.

மூன்றே மாதத்தில் "மக்கர்' : பசுந்தேயிலை வரத்து குறைந்தும் "நோ யூஸ்!' : தொழிற்சாலை அங்கத்தினர்கள் "அப்செட்' மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில், "கோட்டா' முறையை தவிர்க்க, தொழிற்சாலையின் தனி அலுவலர் மற்றும் குழுவின் ஆலோசனைப் படி, 30 லட்சம் மதிப்பில், தனியார் நிறுவனம் மூலம் புதிய டிரையர் இயந்திரம் நிறுவப்பட்டது; ஆரம்பக் கட்ட பணியின் போதே, இயந்திரத்தின் தன்மை குறித்து பலர் கேள்வி எழுப்பினர்.

செயல்பட துவங்கி மூன்றே மாதங்களில், புதிய இயந்திரம் பழுதானதால், தேயிலை உற்பத்தி நிறுத்தப்பட்டது.தற்போது, அங்கத்தினர்கள் வினியோகிக்கும் பசுந்தேயிலையை தொழிற்சாலை நிர்வாகம் வாங்கி, அருகில் உள்ள பிக்கட்டி கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. இதுகுறித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, அங்கத்தினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## தேயிலை தொழிலாளர்களுக்கு ரேடியோ அடையாள அட்டை

குன்னூர் : குன்னூரில் தோட்ட தொழிலாளர்களுக்கு ரேடியோ அலைவரிசை அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

நீலகிரியில் உள்ள 150க்கும் மேற்பட்ட தேயிலை எஸ்டேட்டுகளில் ஆயிரக்கணக்கான தோட்ட தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்; இவர்களில் பலர் கல்வியறிவு இல்லாதவர்களாக உள்ளனர். தேயிலை தோட்டங்களில் தொழிலாளர்கள் பறிக்கும் பசுந்தேயிலை, தராசு மூலம் எடைப் போடப்படுகிறது; மனித ஆற்றல் மூலம் எடை போடப்படுவதால் எடையளவு குறைகிறது என்பது தோட்ட தொழிலாளர்களின் பொதுவான பிரச்னை.

இது போன்ற பிரச்னைகளை களைய, குன்னூர் அருகேயுள்ள கிளண்டேல் தேயிலை எஸ்டேட் நிர்வாகம் தொழிலாளர்கள் 800 பேருக்கு, "ரேடியோ அலைவரிசை அடையாள அட்டை' வழங்கியுள்ளது. அடையாள அட்டையில், தோட்ட தொழிலாளியின் பெயர், பிறந்த தேதி, பணியில் சேர்ந்த தேதி உட்பட அவர்களின் முழு விவரங்கள் இடம் பெற்றுள்ளன. இந்த அட்டைக்குள், கண்ணுக்கு தெரியாத மைக்ரோ சிப், ஆன்டனா பொருத்தப்பட்டுள்ளது. இதில், பதியும் தகவல்களை கம்ப்யூட்டரில் சேகரித்து கொள்ள முடியும்.

தோட்ட தொழிலாளர்கள், தோட்டங்களில் இருந்து பறித்து கொண்டு வரும் பசுந்தேயிலையை எடை போட, எலக்ட்ரானிக் தராசு பயன்படுத்தப்படுகிறது. பறித்து வரப்பட்ட பசுந்தேயிலை மூட்டையை அந்த தராசு மீது வைத்து, தராசின் முன் ரேடியோ அலைவரிசை அடையாள அட்டையை காண்பித்தால், பசுந்தேயிலையின் எடை அந்த அட்டைக்குள் துல்லியமாக பதிவாகிவிடுகிறது. இதன் மூலம் எடையளவு குறைவதற்கான வாய்ப்பு ஏற்படுவதில்லை.

தொழிற்சாலை மேலாளர் வினோத் ஷெனாய் கூறியதாவது: மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உள்ள நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு அந்நிறுவனத்தின் சார்பில் இது போன்ற அடையாள அட்டை வழங்கப்படுகிறது. அந்நாட்டில் உள்ள பஸ், ரயில்களில் ரேடியோ அலைவரிசை தொழில்நுட்ப கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. பஸ், ரயில்களில் கட்டணம் செலுத்தாமல் டெபிட், கிரெடிட் கார்டு போன்று இந்த அடையாள அட்டையை பயன்படுத்தி பயணம் செய்ய முடியும். அந்த தொழில்நுட்பம் விரைவில் இந்தியாவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது இங்குள்ள தோட்ட தொழிலாளர்களும் அத்தகைய தொழில்நுட்ப வசதியை பெற முடியும், என்றார்.

## வேளாண் அமைச்சர் பேச்சு பதவி எதிர்பார்க்காமல் பணியாற்ற வேண்டும்

வாழப்பாடி: "மாற்று கட்சியில் இருந்து விலகி தி.மு.க.,வுக்கு வருபவர்கள், பதவிகளை எதிர்பார்க்காமல் மக்கள் சேவையாற்ற முன் வரவேண்டும்' என, வேளாண்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தெரிவித்தார்.வாழப்பாடி ஒன்றியத்தில் இருந்து பா.ம.க.,- அ.தி.மு.க.,- பா.ஜ., உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் இருந்து விலகிய பா.ம.க.,வை

சேர்ந்த பழனியாபுரம் மாது, அ.தி.மு.க.,வை சேர்ந்த சிங்கிபுரம் முருகேசன் தலைமையில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தி.மு.க.,வில் இணையும் விழா வாழப்பாடியார் மண்டபத்தில் நடந்தது.

பல்வேறு கட்சியில் இருந்து விலகி தி.மு.க.,வில் இணைந்தவர்களை வரவேற்று வேளாண்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் பேசுகையில், "தமிழக முதல்வர் கருணாநிதி தான் நல்ல தலைவர் என அறிந்து கொண்ட மாற்று கட்சி நிர்வாகிகள் தற்போது தி.மு.க.,வில் இணைந்துள்ளனர். புதிதாக தி.மு.க.,வில் தன்னை இணைத்து கொண்டவர்களுக்கு கட்சியின் கோட்பாடுகள் குறித்து விளக்குவதற்கு, விரைவில் பிரமாண்ட கூட்டம் நடத்தப்படும்.

மாற்று கட்சியில் இருந்து விலகி தி.மு.க.,வுக்கு வருபவர்கள், பதவிகளை எதிர் பார்க்காமல் மக்கள் சேவையாற்ற முன் வரவேண்டும்' என்றார்.விழாவில், ஏற்காடு எம்.எல்.ஏ., தமிழ்செல்வன், வாழப்பாடி ஒன்றிய தி.மு.க., செயலாளர் சக்கரவர்த்தி, மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் சுரேஷ்குமார், மாவட்ட வேளாண் விற்பனைக்குழு தலைவர் பழனி, வாழப்பாடி யூனியன் சேர்மன் சந்திரா ராயர், டவுன் பஞ்சாயத்து சேர்மன் கலைவாணி, நங்கவள்ளி சரவணன், படையாச்சூர் அழகரசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கரும்பு விவசாயிகள் கருத்தரங்கம்

கருத்தரங்கம் : தஞ்சாவூர்: அம்மாபேட் டையில் திருமண்டங்குடி திருஆரூரான் சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் கருத்தரங்கம் நடந்தது.கோட்ட அளவில் நடந்த கூட்டத்திற்கு ஆலை துணை மேலாளர் வேங்கடேசப் பெருமாள் வரவேற்றார். பொது மேலாளர் திருநாவுக்கரசு தலைமை வகித்து பேசியதாவது: கரும்புக்கு தற்போது டன் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரத்து 701 வழங்கப்படுகிறது. வண்டி வாடகை முழுவதையும் ஆலையே ஏற்றுக் கொள்கிறது. நிலத்தடி சொட்டு நீர் பாசனம் அமைக்க ஆலை மூலம் ஏக்கருக்கு ரூபாய் 10 ஆயிரம் மான்யம் வழங்கப்படுகிறது.

எனவே இந்த வாய்ப்பை கரும்பு விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். துணைப் பொது மேலாளர்கள் வேலுசாமி, ராஜ்குமார், கரும்பு ஆய்வாளர்கள் உதயகுமார், விவேகானந்தன், ரங்கசாமி, சந்திரமோகன், மணிகண்டன், சுகுமார், பழனிவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர். உதவி மேலாளர் பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

### கரும்புகளை அடியோடு வெட்டினால் ஏக்கருக்கு 4 டன் கூடுதலாக கிடைக்கும் அதிகாரி யோசனை

ஆரணி:கரும்புகளை அடியோடு வெட்டினால் ஏக்கருக்கு 4 டன் கூடுதலாக கிடைக்கும் என்று ஆரணி தாலுகா முதன்மை கரும்பு அலுவலர் ராஜேந்திரன் பேசினார்.ஆரணி தாலுகாவில் உள்ள ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு வெட்டும் கூலித்தொழிலாளர்களின் ஆலோசனை கூட்டம் இரும்பேடு கிராமத்தில் நடந்தது. நிகழ்ச்சிக்கு முதன்மை கரும்பு அலுவலர் ராஜேந்திரன் தலைமை வகித்தார்.

ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை தனிஅலுவலர் முருகசாமி முன்னிலை வகித்தார். ஆரணி தாலுகா முதன்மை கரும்பு அலுவலர் ராஜேந்திரன் பேசியதாவது:தொழிலாளர்கள் கரும்புகள் வெட்டும்போது அடியோடு தரைமட்டத்தில் கொழுந்துகளை நீக்கிவிட்டு வெட்ட வேண்டும். அவ்வாறு வெட்டினால் ஏக்கருக்கு 4 டன் கரும்பு கூடுதலாக கிடைக்கும்.

வேர்ப்பகுதி கொழுந்து, மக்காத்தி போத்தாக்கள், காய்ந்த கரும்பு, சோகைகள் நீக்கிவிட்டு கரும்புகளை கட்டாக கட்டவேண்டும். ஒவ்வொரு தொழிலாளருக்கும் ஜனதா தனிநபர் விபத்து காப்பீடு ஒரு லட்சம் ரூபாய் வரை இன்சூரன்ஸ் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.நிகழ்ச்சியில் ஆரணி தாலுகாவில் உள்ள 50க்கும் மேற்பட்ட கரும்பு விவசாயிகள், கூலித்தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

## இருண்டு கிடக்கும் உழவர் சந்தை

திருத்துறைப்பூண்டி:திருத்துறைப்பூண்டி உழவர் சந்தையில் விளக்கு வசதி உட்பட அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.திருத்துறைப்பூண்டி உழவர் சந்தை முதல்வர் கருணாநிதியால் கடந்த 15.12.1999ல் திறக்கப்பட்ட 3வது உழவர் சந்தையாகும். 10 ஆண்டுகளாக இயங்கி வரும் இந்த உழவர் சந்தையில் சாலை உட்பட அடிப்படை வசதிகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2 மாதங்களுக்கு முன்பு அமைச்சர் மதிவாணன் ஆய்வு செய்து பொதுமக்களிடம், வியாபாரிகளிடம் குறைகளை கேட்டறிந்து உடன் நிவர்த்தி செய்வதாக கூறினார். ஆனால் இந்த உழவர் சந்தை உள்ளே வருவதற்கு சாலை வசதி செய்யப்படவில்லை. குண்டும், குழியுமான சாலையில் காரைகள் கொட்டப்பட்டு அப்படியே கிடக்கிறது.குடிநீர் டேங்க் அருகில் சாக்கடை நீர் ஓடுகிறது. கழிவறை வசதி முழுவதுமாக கிடையாது. வேதாரண்யம், கத்திரிப்புலம், தென்னம்புலம் போன்ற பகுதிகளில் இருந்து காய்கறிகள் தினமும் கொண்டு வரப்படுகிறது.

இரவில் காய்கறிகளை கொண்டு வரும் வியாபாரிகள் உழவர் சந்தை வளாகத்தில் மின்விளக்குகள் இல்லாததால் மிகவும் சிரமப்படுகின்றனர். அதிகாலையில் வியாபாரம் செய்வதற்கு விளக்குகள் இல்லாததால் வெளிச்சம் வந்தபிறகு தான் காய்கறி வியாபாரம் செய்யப்படுகிறது. போதிய வசதியும், விளக்கு வெளிச்சமும் இல்லாத நிலையில் இருண்டு வரும் உழவர் சந்தையாக மாறிவருகிறது. எனவே உழவர் சந்தையில் அடிப்படை வசதிகளை செய்துதர வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வேளாண் விளை பொருட்கள் உற்பத்தியாளர் பயிற்சி முகாம்

சோளிங்கர்:வேளாண் விற்பனை மற் றும் வேளாண் வணிக துறையின் சார்பில் நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் வேளாண் விளை பொருட்கள் உற்பத்தியாளர் மற்றும் வாங்குவோர் பயிற்சி முகாம் நெமிலியில் நடந்தது.

நிகழ்ச்சிக்கு, வேலூர் வேளாண்மை துணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்து பேசுகையில், நீர்வள நில வள திட்டம் குறித்து செயல்படும் 8 துறைகளின் செயல்பாடுகள் பற்றி பேசிய அவர் துறைகளின் மூலமாக விநியோகம் செய்யப்படும் இடு பொருட் களை மானிய விலையில் பெற்று பயனடையும் படி கூறினார். வேளாண்மை அலுவலர் சோமு விளைபொருட்கள் உற்பத்தியாளர் குழு அமைத்தல், புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தல், பொருட்கள் தரம் பிரித்தல் குறித்து பயிற்சி அளித்தார். வேளாண்மை அலுவலர் சத்யபிரகாஷ் அறுவடைக்கு பின் செய்யும் தொழில்நுட்பம், வேளாண் வணிக மையம் மற்றும் சந்தை நிலவரம் குறித்து பயிற்சி அளித்தார்.

கூட்டத்தில் காய்கறி மற்றும் பயிர்வகை மொத்த வியாபாரிகள் சொக்கலிங்கம், பாலகிருஷ்ணன், மூர்த்தி, ஆயில்மில் நிறுவனத்தினர் ஆகியோருடன் உற் பத்தி செய்யும் விளைப் பொருட்கள் குழுவினருக்கும் தரமான பொருட்களை சரியான விலைக்கு பெற்றுக்கொள்ள புத்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டனர். பயிற்சியில் 50 விவசாயிகள் கலந்து கொண்டனர்.ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜேந்திரன், வேலு, ராமலிங்கம், சந்திரசேகரன், சம் பத் ஆகியோர் செய்திருந்தனர்.

## கால்நடை பாதுகாப்பு திட்டசிறப்பு மருத்துவ முகாம்

அணைக்கட்டு:அணைக்கட்டு ஒன்றியம் மருதவல்லி பாளையம் கிராமத்தில் கால்நடை பாதுகாப்பு திட்ட சிறப்பு மருத்துவ முகாம் நடந்தது. மருதவல்லி பாளையம் கிராமத்தில் பொய்கை கால்நடை மருத்துவமனை சார்பில் கால்நடை பாதுகாப்பு திட்ட சிறப்பு மருத்துவ முகாம் நடந்தது.நிகழ்ச்சிக்கு பஞ்., தலைவர் கருணாம் பிகை

முன்னிலை வகித்தார். முன்னாள் தலைவர் பாபுஜி வரவேற்றார். அணைக்கட்டு பிடிஓ., மோகன் முகாமை துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பஞ்., உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.பொய்கை கால்நடை மருத்துவமனை டாக்டர்கள் மற்றும் மருத்துவ குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். இதில் கால்நடைகளுக்கு அடைப்பான் தடுப்பூசி, கோழிகளுக்கு ரத்த கழிச்சல் தடுப்பூசி, கன்றுகளுக்கு குடற்புழு நீக்கம், சினை பார்த்தல், சினை ஊசி போடுதல் என ஆயிரத்திற்கும் அதிகமான கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

முகாமிற்கு வந்த கன்றுகளை பேரணி நடத்தி அதில்10 சிறந்த கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு பரிசு வழங்கப்பட்டது.ஏற்பாடுகளை கால்நடைத்துறையினர் மற்றும் பஞ்., நிர் வாகத்தினர் செய்திருந்தனர்.

### அறுவடை பின்செய் நேர்த்தி முறைகளை கையாள விவசாயிகளுக்கு ஆலோசனை

விழுப்புரம் : விவசாயிகள் தங்கள் நிலத் தில் பயிரிட்டுள்ள நெல் லில் அறுவடை பின் செய் நேர்த்தி முறைகளை கையாண்டு கூடுதல் விலை பெறலாம் என அறி வுரை வழங்கப் பட் டுள்ளது.

வேளாண் வணிக துணை இயக்குனர் (பொறுப்பு) தனவேல் விடுத் துள்ள செய்திக் குறிப்பு: மாவட்டத்தில் கிணற்று பாசனம் மூலம் முன்னதாக சாகுபடி செய்த சம்பா நெல் பயிர்கள் தற் போது அறுவடை செய் யப்படுகிறது. நெல் மணிகள் அரவையில் 62 சதவீதம் முழு அரிசி கிடைத்தால் தான் நல்ல விலை கிடைக்கும். நெல் லில் அறுவடை பின்செய் நேர்த்தி முறைகளை கையாண்டு கூடுதல் விலை பெறலாம். இதற்கு நெல் கதிர் மணிகள் 80 சதவீதம் மஞ் சள் நிறமாக மாறி இருந் தாலே அறுவடை செய்து மணிகள் உதிர் வதை தவிர்க்கலாம். அறுவடையின் போது 19 முதல் 23 சதம் ஈரப்பதம் இருக்க வேண்டும். முதிர்ந்த நெல் மணிகளின் அரிசி கடுமையாகவும், உறுதியாகவும் இருக்கும்.

அறுவடை செய்த நெல்லை நன்றாக சுத்தம் செய்ய வேண்டும். அதிக சூரிய வெப்பத்தில் நெல்லை காய வைக்க கூடாது. காய வைத்த நெல்லின் ஈரப்பதம் 12 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும். அதிக ஈரப்பதமுள்ள நெல் மணிகளை சேமித்தால் பூஞ் ஞான வித்துக்கள் பரவி தரம் பாதிக்கும்.

நெல்லை சுத்தமான கோணிப் பைகளில் நிரப்பி தரையின் மீது மரச் சட்டங்கள், வைக்கோல் பரப்பி அதன் மேல் மூட் டைகளை அடுக்கி வைக்க வேண்டும். நெல் மூட்டைகளை சுவரிலிருந்து ஒரு அடி இடைவெளி விட்டு அடுக்கி வைத்தால் சுவற் றின் ஈரப்பதம் நெல் மணிகளை தாக்காது. சேமித்து வைத்துள்ள நெல்லில் அந் துப் பூச்சி தாக்காமலிருக்க மாலத்தியான் மருந்தை 1 லிட்டர் நீருக்கு 10 மி.லி., மருந்து என்ற அளவில் கலந்து தரைப் பகுதி மற் றும் மூட்டைகளின் மீது தெளிக்க வேண்டும். மார்க் கெட் கமிட்டிகளுக்கு விற்பனைக்கு நெல்லை ரகம் வாரியாக கொண்டு வர வேண்டும். பூச்சிகள், பூஞ்ஞானங் கள் தாக்கப்பட்ட நெல் மற்றும் ஈரப்பதத்தால் கெட் டுப் போன நெல்லை தனியாக பிரிக்க வேண்டும். இந்த முறைகளை கையாண்டு கூடுதல் விலை பெற்று அதிக லாபம் பெறலாம்.

### வேளாண்மை பொறியியல் துறையின் அலுவலகம் உடுமலையில் அமைப்பு

உடுமலை : உடுமலை பகுதி விவசாயிகளுக்காக வேளாண்மை பொறியியல் துறை தற்காலிக அலுவலகம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் செயல்பட துவங்கியுள்ளது.

வேளாண் பொறியியல் துறை மூலம் மோட்டார், சொட்டு நீர் பாசனம், பவர் டில்லர், ரோட்டாவேட்டர் உட்பட பண்ணைக்கருவிகளுக்கு மானியம் அளிக்கப்படுகிறது. உடுமலை பகுதி விவசாயிகளுக்கான உதவி

செயற்பொறியாளர் அலுவலகம் பொள்ளாச்சியில் இயங்கி வந்தது. திருப்பூர் மாவட்ட பிரிப்பிற்கு பின்னர் உடுமலை பகுதி தாராபுரம் உதவி செயற்பொறியாளர் அலுவலக கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டது. விவசாயிகள் தாராபுரம் செல்வதற்கு அலைச்சல் ஏற்படுவதால் உடுமலையிலேயே பொறியியல் துறை அலுவலகம் துவங்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில், உடுமலை வேளாண்மை விரிவாக்க மையத்தில் வாரந்தோறும் வியாழன்று பொறியியல் துறை தற்காலிக அலுவலகம் செயல்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடுமலை, குடிமங்கலம், மடத்துக்குளம் பகுதிகளுக்கு தலா ஒரு இளநிலை பொறியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அதிகாரிகள் வியாழன்று மானியத்திற்கான விண்ணப்பங்களை பதிவு செய்தல் மற்றும் தேவையான திட்டங்கள் குறித்த விளக்கங்களை அளிக்க உள்ளனர். கடந்த 31 ம் தேதி முதல் திட்டம் செயல்பாட் டிற்கு வந்துள்ளது. துவக்க விழாவில் பங்கேற்ற திருப்பூர் வேளாண்மை செயற்பொறியாளர் ஜெகனநாதனிடம் விவசாயிகள் விழிப்புணர்வு இயக்கத்தினர் உடுமலையில் நிரந்தர அலுவலகம் உட்பட கோரிக்கைகளை மனுவாக அளித்தனர்.

### கருவேப்பிலை கொள்முதல் விலை உயர்ந்தது: விவசாயிகள் சந்தோஷம்

பல்லடம் : கருவேப்பிலை கொள்முதல் விலை ஒரே வாரத்தில் கிலோவுக்கு மூன்று ரூபாய் உயர்வு, பல்லடம் பகுதி கருவேப்பிலை விவசாயிகளை உற்சாகம் அடையச் செய்துள்ளது.

செலக்கரிச்சல், ஆலூத்துப்பாளையம், வெங்கிட்டாபுரம், காளி வேலம்பட்டி, சித்தம்பலம், கரசமடை, சுக்கம்பாளையம் என பல இடங்களில் 200 ஏக் கர் பரப்பளவில் கருவேப்பிலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சாகுபடி செய்யப்பட்ட கருவேப் பிலை, பறிப்புக்கு பின், பல்லடம், திருப் பூர்,கோவை மற்றும் கேரள பகுதிகளில் உள்ள காய்கறிமார்க் கெட்டுகளுக்கு பஸ், வேன் மூலம் தினமும் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

கடந்த கார்த்திகை மாதம் முதல் தற் போது வரை பல்லடம் பகுதிகளில் கடும் பனிபொழிவு தொடர்ந்து நீடித்து வருகிறது. இதன் எதிரொலியாக, கருவேப்பிலை சாகுபடி நிலங்களில் உள்ள கருவேப் பிலை செடிகள் கருகியும், புள்ளிநோய் தாக்குதலுக்கு உட்பட்டு கருவேப்பிலை செடிகள் மற்றும் மரங்களில் இருந்து கருவேப்பிலைகள் பழு த்து தொடர்ந்து உதிர்ந்து வருகின்றன. இதன் காரணமாக, பல் லடம் பகுதியில் கருவேப்பிலை விளைச்சல், இரு மாதங்களாக பாதிக்கு பாதி என்ற அளவுக்கு சரிந்தது.இந்நிலையில், திருப் பூர், கோவை, கேரள காய் கறி மார்க்கெட்களில் தொடர்ச்சியாகவே கருவேப்பிலைக்கு "கிராக்கி' ஏற்பட்டுள்ளதால், கடந்த வாரம் கருவேப்பிலை விவசாயிகளிடம் கிலோ 17 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்ட கருவேப்பிலை, தற்போது, கிலோவுக்கு மூன்று ரூபாய்உயர்த்தி 20 ரூபாய்க்கு வியாபாரிகள் கொள் முதல் செய்கின்றனர்.

விளைச்சல் சரிந்துள்ள நிலையில் கொள்முதல் விலை உயர்வு, பல்லடம் கருவேப்பிலை விவசாயிகளை உற்சாகம் அடையச் செய்துள்ளது. கருவேப்பிலை சாகுபடி பகுதிகளில் போதிய மழையின்மை, பனிப்பொழிவு அதிகரிப்பால், கருவேப்பிலை விளைச்சல் கடுமையாக சரிந்துள் ளதால், பொங்கல் பண்டிகைக்கு பின், கிலோவுக்கு மேலும் ஐந்து ரூபாய் வரை கொள்முதல் விலை அதிகரிக்கலாம் என்பதால், பல்லடம் கருவேப்பிலை விவசாயிகளை இரட்டிப்பு மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

### வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் மானியம்

திருப்பூர் : கால்நடை பராமரிப்பு துறை சார்பில், வேளாண் அபிவிருத்தி திட்டத்தில் திருப்பூரில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

கால்நடை பராமரிப்பு துறை சார்பில், வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் செம்மறி ஆடுகள், தீவனப்பயிர் பதப்படுத்துதல் மற்றும் தீவனம் வெட்டும் இயந்திரம், தீவன அபிவிருத்தி கோ-4 புல் வகைகள் பயிரிடுதல் உள்ளிட்டவற்றுக்கு மானியம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் திருப்பூர் மாவட்டத்துக்கு 13 பயனாளிகளுக்கு செம்மறி ஆடுகள் வாங்க மானியம் வழங்கப்படுகிறது. ஒரு பயனாளி 32 ஆயிரத்து 700 ரூபாய் மதிப்பில், 20 ஆடுகள் மற்றும் ஒரு கிடா வாங்கலாம். இதற்காக, 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. திருப்பூர் கால்நடைத்துறை கோட்டத்தில் நடப்பாண்டில் நான்கு பயனாளிகளுக்கும், உடுமலை கோட்டத்தில் நான்கு பயனாளிகளுக்கும், தாராபுரம் கோட்டத்தில் ஐந்து பயனாளிகளுக்கும் மானியம் வழங்கப்படும்.

தீவனப்பயிர் பதப்படுத்துதல் மற்றும் தீவனம் வெட்டும் இயந்திரம் வாங்க 12 பயனாளிகளுக்கு மானியம் வழங்கப்படும். இதில், கரும்பு கொழுந்தாடையை பயன்படுத்தி, இயந்திரம் மூலம் தோகையை நறுக்கி, சைலோ குழி அமைத்து, யூரியா, சர்க்கரை, உப்பு கொண்டு இறுக மூடி பதப்படுத்துவதற்காக, இம்மானியம் வழங்கப்படுகிறது.

ஒரு பயனாளிக்கு 22 ஆயிரத்து 500 ரூபாய் வீதம் 12 பயனாளிகளுக்கு இரண்டு லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் 100 சதவீத மானியம் வழங்க, திருப்பூர் மாவட்டத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், திருப்பூர் கோட்டத்தில் நான்கு விவசாயிகளும், உடுமலை கோட்டத்தில் எட்டு விவசாயிகளும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

புல்வகைகள் பயிரிட 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. திருப்பூர் மாவட்டத்தில் 52 ஏக்கருக்கு நடப்பு ஆண்டில் வழங்கப்படும். இதில், திருப்பூர் கோட்டத்தில் 20 ஏக்கருக்கும், உடுமலை கோட்டத்தில் 12 ஏக்கருக்கும், தாராபுரம் கோட்டத்தில் 20 ஏக்கருக்கும் மானியம் வழங்கப்பட உள்ளது. இத்திட்டங்களின் கீழ், முதல்கட்டமாக நான்கு பயனாளிகளுக்கு மானிய உதவி வழங்கப்பட்டது.

பெருமாநல்லூர் வடக்கால் தோட்டம் பகுதியை சேர்ந்த சுப்ரமணி, பெருமாநல்லூர் கருக்கன் தோட்டம் பகுதியை சேர்ந்த பழனிசாமி ஆகியோருக்கு, தீவனப்பயிர் பதப்படுத்துதல் மற்றும் இயந்திரம் வாங்கும் திட்டத்தில், தலா 22 ஆயிரத்து 500 ரூபாய் மானிய உதவி வழங்கப்பட்டது.
செம்மறி ஆடுகள் வாங்கும் பயனாளிகளான முத்தணம்பாளையம் யேசுநாதர் மகளிர் சுய உதவிக்குழு, கரடிவாவி பசுமை கூட்டுப் பொறுப்பு குழுவுக்கு, தலா 23 ஆயிரத்து 600 ரூபாய் மானியம் வழங்கப்பட்டது. மானிய தொகையை கலெக்டர் சமயமூர்த்தி வழங்கினார். டி.ஆர்.ஓ., முரளிதரன், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் பிரான்சிஸ் சாமுவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினகரன்

**ஆப்பிள், ஆரஞ்சு பழங்கள் சீனாவில் இருந்து இறக்குமதி**

பதிவு செய்த நாள் 1/11/2010 12:34:15 AM



சென்னை : இமாச்சலப் பிரதேசத்தில் இருந்து கோயம்பேடு மார்க்கெட்டுக்கு ஆப்பிள் வருவது வழக்கம். இப்போது, அங்கு சீசன் முடிந்து விட்டதால், சீனா, அமெரிக்காவில் இருந்து வாரத்துக்கு 200 டன் ஆப்பிள் பழங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. வரத்து அதிகமானதால், கடந்த வாரம் கிலோ ரூ.120க்கு விற்ற ஆப்பிள் விலை ரூ.100க்கு குறைந்துள்ளது.

மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் இருந்து தினமும் 30 டன் ஆரஞ்சு பழங்கள் வந்து சேர்ந்தன. அதன் வரத்து நின்று விட்டதால், சீனாவில் இருந்து 'நேவல்' வகை ஆரஞ்சு பழங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. வாரத்துக்கு 40 டன் பழங்கள் வரை இறக்குமதி செய்யப்படுகிறது. நாக்பூர் ஆரஞ்சு பழங்களைவிட, சீன ஆரஞ்சின் சுவை அதிகம். ஒரு மாதம் மட்டுமே சீன ஆரஞ்சு பழங்கள் கிடைக்கும்.

அடுத்த மாதம் எகிப்தில் இருந்து ஆரஞ்சு பழங்கள் இறக்குமதி செய்யப்பட உள்ளன.ஆந்திர மாநிலம் கடப்பா, அனந்தபூர் மாவட்டங்களில் இருந்து சாத்துக்குடி பழங்கள் கோயம்பேடுக்கு வரும். இந்தாண்டு விளைச்சல் குறைவு என்பதால், முன்பு 150 முதல் 200 டன் வரை வந்த சாத்துக்குடி, 100 டன் மட்டுமே வருகிறது. கடந்த ஆண்டு கிலோ ரூ.25க்கு விற்ற சாத்துக்குடி இப்போது ரூ.45க்கு விற்கப்படுகிறது.

கர்நாடக மாநிலம் பிஜப்பூரில் இருந்து தினமும் 30 டன் மாதுளை பழங்கள் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வந்தன. இப்போது, வரத்து அதிகமாகி 40 டன் வரை வருகிறது. இதனால் கிலோ ரூ.80க்கு விற்ற மாதுளை ரூ.60க்கு குறைந்துள்ளது. மகாராஷ்டிராவில் இருந்து தினமும் 60 டன் வந்த விதையற்ற பச்சை திராட்சை இப்போது 80 டன்னாக அதிகரித்துள்ளதால், ரூ.70ல் இருந்து ரூ.60க்கு விலை குறைந்துள்ளது. இத்தகவலை பழ வியாபாரிகள் சங்கத்தை சேர்ந்த மணிவண்ணன் தெரிவித்தார்.

## பயிர் காப்பீடு திட்டத்தில் கடலை, மக்காச்சோளத்திற்கு பிரிமியம்

பதிவு செய்த நாள் 1/11/2010 2:30:47 AM

விருதுநகர் : பயிர் காப்பீடு திட்டத்தில் கடலை, மக்காச்சோளத்திற்கு பிரிமியம் செலுத்த ஜன.15ம் தேதி கடைசி நாள் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

விருதுநகரில் பயிர் காப்பீடு குறித்து வங்கியாளர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு தலைமை வகித்து மாவட்ட கலெக்டர் சிஜிதாமஸ் பேசியதாவது:

மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களுக்கு காப்பீடு திட்டத்தில் பிரிமியம் செலுத்துவதற்கு மக்காச்சோளம், நிலக்கடலை, எள், சூரியகாந்தி, தக்காளி, வெங்காயம், மா ஆகிய பயிர்களுக்கு ஜன.15, மிளகாய் மற்றும் பருத்தி பயிர்களுக்கு ஜன.31ம் தேதி கடைசி நாளாகும். மாவட்டத்தில் அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் பாண்டியன் கிராம வங்கிகள் தாங்கள் வழங்கும் விவசாய நகைக்கடன் மற்றும் பயிர் கடன்களுக்கு கட்டாயமாக பிரிமிய தொகையை கடன் பெறும் விவசாயிகளிடமிருந்து பெற வேண்டும்.

பயிர் காப்பீடு நிறுவனத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ள அரசு சாரா அலுவலர்கள் கடன் பெறாத விவசாயிகளிடமிருந்து பிரிமிய தொகையை வசூல் செய்து வங்கிகளில் செலுத்த வேண்டும். பிரிமியம் செலுத்துவதற்கு குறுகிய காலமே உள்ளதால் வேளாண்மை துறை உதவி இயக்குநர்கள் மற்றும் இதர அலுவலர்களும் துரிதமாக பணியாற்றி சம்பந்தப்பட்ட அனைத்து விவசாயிகளிடமும் பிரிமிய தொகையை வசூலிக்க வேளாண் இணை இயக்குநர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு ஆட்சியர் பேசினார்.

கூட்டத்தில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் ஜெயபாண்டியன், வேளாண் இணை இயக்குநர் பாண்டியராசு, முன்னோடி வங்கி மேலாளர் சுகுமாரன் மற்றும் அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தில் ரூ.1,171 கோடி நஷ்டஈடு

பதிவு செய்த நாள் 1/11/2010 2:28:41 AM

தேனி : தமிழகத்தில் தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் இதுவரை ரூ.ஆயிரத்து 171 கோடி நஷ்ட ஈடாக வழங்கப்பட்டுள்ளது என்று திட்ட மண்டல மேலாளர் அன்பரசன்தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத்திட்ட மண்டல மேலாளர் அன்பரசு விடுத்துள்ள அறிக்கை: மத்திய, மாநில அரசின் பரிந்துரையுடன் அக்ரிக்கல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா நிறுவனம் மூலம் தமிழ்நாட்டில் தேசிய வேளாண் காப்பீட்டுத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் நெல், கம்பு, சோளம், கேழ்வரகு, மக்காச்சோளம், நிலக்கடலை, எள், சூரியகாந்தி, உளுந்து, பச்சைப்பயிறு, கொள்ளு, பருத்தி மிளகாய், வாழை, மரவள்ளி, வெங்காயம், கரும்பு, உருளை உள்ளிட்ட உணவுப்பயிர்கள், பயிறு வகைகள், எண்ணை வித்துக்கள் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு அனைத்து விதமான இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் இழப்பீட்டிற்காக காப்பீடு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் குத்தகைதாரர்கள், வங்கிக்கடன் பெறுவோர் மற்றும் கடன்பெறாதவர்கள் உட்பட அனைத்து விவசாயிகளும் சேர்ந்து பயன்பெறலாம். தமிழகத்தில் இதுவரை விவசாயிகளிடம் இருந்து ரூ.116 கோடி பிரிமியம் பெறப்பட்டு இயற்கை சீற்றங்களின்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.ஆயிரத்து 171 கோடி நஷ்ட ஈடாக வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் எட்டு லட்சம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

மாநில அரசின் விவசாயத்துறையினால் பயிர் அறுவடை காலத்தின்போது, பயிர் அறுவடை சோதனை நடத்தப்படுகிறது. இதில் நடப்பு பருவ சராசரி மகசூலை கடந்த மூன்று அல்லது ஐந்து ஆண்டு கால உத்திரவாத மகசூலோடு ஒப்பிட்டு நடப்பு பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைந்திருக்கிறதோ அந்தளவை காப்பீட்டுத்துறை கணக்கிட்டு காப்பீடு செய்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்குகிறது. இத்தகைய காப்பீடு பெற விரும்பும் விவசாயிகள் தேசிய வேளாண்மை பயிர் காப்பீடு நிறுவன அலுவலகத்தினை தொடர்பு கொண்டு விபரம் பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ராமநாதபுரம் மாவட்டத்தில் இலவச கால்நடை பாதுகாப்பு

பதிவு செய்த நாள் 1/11/2010 2:18:22 AM

ராமநாதபுரம் :ராமநாதபுரம் மாவட்டத்தில் இலவச கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்கள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

ராமநாதபுரம் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் காவேரி செல்வன் விடுத்துள்ள அறிக்கை: ராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் இலவச கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்கள் தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றன. இம்முகாமில் கால்நடைகளுக்கு சிகிச்சை, செயற்கை முறை கருவூட்டல், குடற்புழு நீக்கம், நோய் தடுப்பூசி, மலட்டு சிகிச்சை, சிறந்த கன்றுகளுக்கு பரிசு ஆகிய பணிகள் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன.

மாவட்டத்தில் ஜனவரி 12ல் கடலாடி ஒன்றியம் மூக்கையூரிலும், ஜன.13ல் முதுகுளத்தூர் ஒன்றியம் வெங்கலக்குறிச்சியிலும், ஜன.16ல் கமுதி ஒன்றியம் கோவிலாங்குளத்திலும், ஜன.20ல் முதுகுளத்தூர் ஒன்றியம் பூசேரி மற்றும் போகலூர் ஒன்றியம் கீழம்பல் ஆகிய கிராமங்களிலும், ஜன.21ல் திருப்புல்லாணி ஒன்றியம் மேலமடையிலும், ஜன.22ல் ராமநாதபுரம் ஒன்றியம் மாதவனூரிலும், ஜன.23ல் நயினார்கோவில் ஒன்றியம் குளத்தூரிலும், ஜன.27ல் கடலாடி ஒன்றியம் மேலச்செல்வனூர் மற்றும் மண்டபம் ஒன்றியம் பொன்குளத்திலும், ஜன.28ல் ஆர்எஸ் மங்கலம் ஒன்றியம் திருத்தேர்வலையிலும், ஜன.30ல் போகலூர் ஒன்றி யம் அ.புத்தூரிலும் கால் நடை பாதுகாப்பு திட்ட முகாம்கள் நடைபெற உள்ளன. இம்முகாம்களில் பொதுமக்கள் தங்களது கால்நடைகளை கொண்டு வந்து சிகிச்சை பெற்று பயன் பெறலாம். இவ்வாறு அறிவித்துள்ளார்.

### விவசாயிகளுக்கு நவீன கரும்பு சாகுபடி

பதிவு செய்த நாள் 1/11/2010 2:21:15 AM

சிவகங்கை : தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் திறந்தவெளி மற்றும் தொலைதூர கல்வி இயக்கம், சக்தி சர்க்கரை ஆலை சார் பில் நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்ப சான்றிதழ் பயிற்சி துவக்கவிழா சிவகங்கையில் நடந்தது.

சக்தி சர்க்கரை ஆலை கரும்பு உதவி பொதுமேலாளர் பால்டேவிட் தர்மேந்திரன் வரவேற்றார். முதுநிலைபொதுமேலாளர் ஆறுமுகம் பேசுகையில்,

நவீன கரும்பு சாகுபடி உத்திகள் குறித்து விவசாயிகளுக்குபயிற்சி நடத்தப்படுகிறது. இதன் மூலம் தற்போதைய மகசூலான 39 டன்னிலிருந்து 50 டன்னாக உயர்த்த முடியும்.
மேலும் தமிழ்நாடு வே ளாண்மை பல்கலை கழகம் நீர்வள நிலவள திட்டம் மூலம் கரும்பு விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது,என்றார்.

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் டீன் வைரவன் பயிற்சிக்கான சான்றிதழ் பாடநூலை வெளியிட்டு பயிற்சியை துவக்கிவத்தார். கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ராஜேந்திரன், முனைவர்கள் மாணிக்கம், புருஷோத்தமன் பயிற்சி அளித்தனர்.
இதில் சொட்டுநீர் பாசனமுறை, ஒருங்கிணை ந்த பயிர் பாதுகாப்பு, பூச்சி நிர்வாகம், கரும்பு ரகத்தேர்வு உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

இதில் ஏராளமான கரும்பு விவசாயிகள் கலந்து கொண்டனர். இப்பயிற்சி 6 மாத காலத்திற்கு அளிக்கப் பட உள்ளது.